காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை

"நான்தான் அமைச்சர்"

துணை நடிகை

அந்தச் சிற்றூரில் ஒரு அம்மையாருக்குப் பென்னாடை போர்த்தப் போவது பற்றிய செய்தி மாவட்டச் செய்தித் தாளில் வந்திருந்தது. இவ்விழாவுக்கு சோபியாவிலிருந்தும் விருந்தினர்கள் வரப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த நாளில் நூல் நிலையக் கிளப்பில் விழா ஆரம்பமானது. மண்டபம் முழுவதும் மக்கள் நிறைந்திருந்தனர்.

சோபியாவிலிருந்து வந்தவர்கள் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். மேடையில் விழாவின் தலைமைக் குழு உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர்.

‘இதென்ன சம்பிரதாயமான பாராட்டு விழாதானே!’ என்று பலரும் அசமந்தமாக இருந்தனர். கூட்டத்தினர் முகத்தில், அலுப்பின் அறிகுறிகள் அப்பட்டமாகத் தெரிந்தன. அங்கிருந்த பள்ளிச் சிறுமிகளின் முகத்தில் மட்டுமே உற்சாகம் மிளிர்ந்தது.

கூட்டத்தினரின் மனோநிலையை ஊகித்துக்கொண்டு விழாக் கமிட்டித் தலைவர், சுருக்கமாக விழாவை முடித்துக்கொள்ள நினைத்தார். ஆனால் அவர் முன்னிருந்த நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்த பேச்சாளர்களின் பட்டியல் மிகவும் நீளமாகவிருந்தது. பலரது பெயர்களை நீக்கிவிட நினைத்தார். ஆனால் ஒவ்வொருவரும் ஒரு ஸ்தாபனத்தின் பிரதிநிதியாக இருந்ததால், அவ்வாறு செய்ய முடியவில்லை! கடைசியில் ஒருவரது பெயருக்கு நேராக “தனிப்பட்ட முறையில் பேசுவார்” என்றிருந்தது.

ஆம், இந்த ஆசாமியின் பெயரையாவது நீக்கிவிடலாம் என்று நினைத்த தலைவர், பென்சிலைக் கையில் எடுத்தார். ஆனால் ஏதோ ஓர் உணர்வு அவரது கைகளைக் கட்டிப் போட்டது.

விழாக் கூட்டம் தொடங்கியது. சம்பிரதாயப் பேச்சுக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன. கூட்டத்தினர் விளக்கெண்ணெய் குடிப்பதுபோல முகத்தைச் சுளித்துக்கொண்டு அலுப்புடன் அமர்ந்திருந்தனர். கடைசியில் தலைவர் “தோர் ஸ்தோயன் தோப்ரோவ்...பேசுவார் ...அவர்” என்று தட்டுத் தடுமாறிக் கூறினார். “என்னடா இது தலைவர் தடுமாறுகிறார்?” என்று பலரும் மேடையை உற்று நோக்கினர்.

இராணுவ உடையிலிருந்த ஒரு கர்னல் பேசத் தொடங்கினார். “யார் அது?” என்று பலரும் வியப்புடன் நோக்கினர்.

“தோழர்களே” என்று ஆரம்பித்தார் கர்னல். “நான் வெகுநேரம் பேசவேண்டியிருக்கும் என்று அஞ்சுகிறேன். ஆனால் அதற்குத்தானே நான் இங்கு வந்திருக்கிறேன்! எனவே, தோழர்களே, அருள் கூர்ந்து எனது சொற்பொழிவை இறுதிவரை கேளுங்கள்...”

பதட்டமில்லாத நிதானமான குரலில் அவர் பேசினார்: “நான் நாஜிகளின் ஆக்கிரமிப்பின்போது தலைமறைவாக விருந்தகாலத்தில் என் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றைப்பற்றிக் கூறவே இங்குவந்துள்ளேன். 1943 வசந்த பருவத்தில் உங்கள் ஊரில் நடந்த சம்பவம் அது. ஒருநாள் மாலையில் நான் ஓரிடத்திற்குச் சென்றுவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தபோது இரகசியப் போலீஸ் ஏஜெண்ட் ஒருவன் என்னைப் பின்தொடர்வதை உணர்ந்தேன். எனவே, திசை மாறி, வளைந்து வளைந்து செல்லத் தொடங்கினேன். ஆனால் என்னைப் பின்தொடர்ந்த ஆசாமி விடாக்கொண்டனாக இருந்தான். அவனுடன் மற்றொரு ஆளும் “மப்டி”யில் இருந்தான். ஊரின் எல்லையை அடைந்ததும் நான் காட்டை நோக்கி ஓடத் தொடங்கினேன். அப்படியாவது அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தேன்.

“ஆனால் என்னைத் துரத்திக்கொண்டு ஓடி வந்தவர்கள், ‘நில், ஓடாதே’ என்று கூவியது என் காதில் விழுந்தது. என் தலைக்கு மேல் அவர்கள் சுட்டனர். என்னை உயிருடன் பிடிக்கவேண்டும் என்பது திட்டம் என்று தெரிந்துவிட்டது.

“ஆயினும் நான் ஓடிக்கொண்டே இருந்தேன். ஆனால் இதற்குள் என்னைத துரத்தி வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அப்போது அங்கு ஓர் ஒதுக்குப்புறத்தில் தன்னந்தனியாக ஒரு சிறிய வீடு இருந்ததைக் கண்டேன். உடனே அவ்வீட்டின் தோட்டத்துப் பக்கம் சென்று வீட்டினுள் புகுந்து, கதவை அடைத்துக்கொண்டேன். அப்போது நான் அங்கே கண்ட காட்சி எனது இரத்தத்தை உறையச் செய்தது.

“அங்கே ஓர் இளம் பெண் வெண்ணிறச் சால்வையைப் போர்த்திக்கொண்டு கையில் ஓர் புத்தகத்துடன் நின்றுகொண்டிருந்தாள்! அவள் என்னைக் கண்டதும் அதிர்ச்சியால் கூச்சலிட்டாள். அதற்குள் என்னைத் துரத்தி வந்தவர்கள் அந்த இடத்தை அடைந்துவிட்டனர். உடனே அந்தப் பெண் தனது வாயில் கையை வைத்துப் பொத்திக்கொண்டதைக் கண்டேன்.

“நான் உடனே என் ரிவால்வரை எடுத்துத் தயாராகக் கையில் வைத்துக்கொண்டேன். எனது உடலில் கடைசி இரத்தம் உள்ளவரை போராடுவது என்று நான் முடிவு செய்துகொண்டேன்.

“அப்போது அந்த இரகசிய போலீசு ஏஜெண்டுகள் வீட்டின் பின்பக்க “கேட்டை”த் திறந்து

(4-ம் பக்கம் பார்க்க)

499

14.3
1965

ஒரு சொல்

மலர் 1   14—3—65   இதழ் 31

மாணவர்களுக்கு ஒருசொல்: உடனடியாக உங்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு, வகுப்புகளுக்குச் செல்லுங்கள். உங்களுடைய நல்வாழ்வில் அக்கறைகொண்டோர் அனைவரும் இதுநேரத்தில் இதனையே வேண்டுவர்; வேண்டுகின்றனர். மூத்தோர் சொல் கேட்க — போராட்டத்தைக் கைவிட்டு கல்வியில் கருத்தைச் செலுத்துக. அன்போடு நாடு உங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

எதிர்காலம் என்ன ஆகுமோ, எப்படி இருக்குமோ என்ற அச்சத்தினால், உங்களுடைய கோரிக்கையை முன்னிறுத்திப் போராட்டம் துவக்கினீர்கள். சுமார் ஆறு கிழமைகளுக்குமுன் துவக்கப்பட்ட அந்தப் போராட்டம் தமிழகம் முழுதும் படர்ந்து அண்டை மாநிலங்களிலும் அரும்பியது. குறட்டைவிட்டுத் தூங்கிய பேர்களும், துயில் கலைந்து எழுந்து "ஆமாம். அது சரிதானே" என்று சொன்னார்கள். இதழ் உலகு உங்கள் குரல்கேட்டு, கோரிக்கையை ஆதரித்தது. அரசில் தலைவர்கள் உங்கள்பால் அனுதாபம் கொண்டனர். அடைத்துக்கிடந்த செவிகள் திறக்கப்பட்டன; உங்கள் குரல் கேட்கவேண்டிய இடத்தில் கேட்டிருக்கிறது.

காலம் கனியவேண்டும்; எண்ணம் செயலாவதற்குச் சிறிது காலமேனும் ஆகுமன்றோ? மூடிக்கிடந்த கதவுகள் உங்கள் முயற்சியால் திறக்கப்பட்டுள்ளன. அது நீங்கள் பெற்றுள்ள பெருவெற்றி. இந்த நிலையில் கோரிக்கைகள் நிறைவேறும் என்ற நம்பிக்கையில் — நீங்கள் உங்கள் கல்வியைக் கவனிப்பதே இனி கடமையாக இருக்கவேண்டும்.

அரசியல் ஆகாதது அன்று; வேண்டாம் என்று நாம் அதனைவிட்டாலும் அது நம்மை விடுவதாக இல்லை. அடுப்பங்கரைவரை அரசியல் வருகிறது. இவர் இன்னார்தான் என்றில்லாமல், எவரும் அரசியலில் ஈடுபடலாம். பங்குபெறலாம். ஆனால் ஒவ்வொன்றுக்கும் உரிய காலம் இருக்கிறது. மாணவப் பருவம் என்பது அரசியலை அறிந்துகொள்வதற்கான காலமேயன்றி அரசியலில் ஈடுபடுவதற்கான காலம் அன்று. பயிரில் கதிர் தோன்றுகின்றது. கதிரில் உள்ள மணிகளில் பால்பிடித்தால் தான் அது நெல் ஆகும். இல்லையேல் பதராகும். மனிதனுக்கு அறிவு பாலாகும். அறிவெனும் பாலற்றவன் பதடி ஆவான் என்பர் வள்ளுவரும். அறிவின் வாயில்களில் கல்வி தலைவாயில். அந்தத் தலைவாயிலில் நிற்கும் நீங்கள் இந்த நேரத்தில் வாய்ப்பை வீணாக்காது பொன்னாக்கிக்கொள்ள வேண்டும்.

'கல்போல் நின்ற' அரசும் கரைந்து, மாணவர்மீது தொடங்கிருந்த வழக்குகளைத் திருப்பப் பெற்றுக் கொண்டது; தண்டனையைத் தள்ளிவிட்டது. சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தரின் நன்முயற்சியால் மாணவர்கள் அத்தனைபேரும் இந்த ஆண்டே தேர்வு எழுதலாம் என்ற நிலை தோன்றியுள்ளது. வருகைநாள் முதலிய சடங்குகள் நீக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழ்நிலையில் நீங்கள் செய்யத்தக்கது உடனடியாகக் கல்விக்கூடங்களுக்குச் செல்வதுதான்.

உங்களுடைய போராட்டம் கல்வியைக் கெடுத்துக்கொள்வதற்காகத் துவக்கப்பட்டது அன்று. உங்களுடைய எதிர்காலம் கெட்டுவிடுமோ என்ற கவலையால், அச்சத்தால், துவக்கப்பட்டது. எங்கள் குறை இது என்று கூறினீர்கள். நல்லறிவாளர் பலரும், உங்கள் கோரிக்கையை உணர்ந்து, தங்களுடைய நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினர். இதழ்கள், வழக்கறிஞர்கள், நாட்டு மக்களின் பெரும்பகுதியினர் உங்களுடைய குரலைக் கேட்டுள்ளனர்.

மொழிப்பிரச்சினை முடிந்துவிட்ட பிரச்சினை அன்று திரும்பவும் அதிலே செய்யத்தக்க மாற்றங்கள் உள்ளன என்பதை இன்று பலரும் ஒப்புகின்றனர். வாக்குறுதியே போதும் என்ற நிலைமாறி சட்டரீதியான பாதுகாப்பு தருதல் என்ற நிலை தோன்றியுள்ளது. அது

எப்படி அமையும் என்பதை ஆராய்வதும், அமைப்பதும் அரசியலில் ஈடுபட்டுள்ளோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

ஆகவே மாணவர்களே, உங்கள் கவனம் இப்போது கல்வியில்தான் இருக்கவேண்டும் என்பதைக் கூறுகிறோம்.

அண்மையில் வரஇருந்த தேர்வுகள் ஒத்திப்போடப்பட்டுள்ளன. கிடைக்கும் காலத்தை ஒருகணமும் வீணக்காமல் பயன்படுத்தினல் நிச்சயம் நீங்கள் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. இவைகளையெல்லாம் கருதி மாணவர்கள் உடனடியாகத் தங்கள் போராட்டத்தை நிறுத்திவிட்டு, வகுப்புகளுக்குச் செல்வார்கள் என நம்புகிறோம்; செல்லவேண்டும் என விரும்புகின்றோம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு, அங்கிருந்த பூச்செடிகளை மிதித்துக்கொண்டு வந்தனர்.

"உடனே நான் மறைந்திருந்த வீட்டைச் சேர்ந்த இளம் பெண் வெளியே ஓடிவந்து, பெரும் கூச்சல் போட்டாள்:

"ஏ, முரடர்களே! உங்களுக்கு அறிவில்லையா? மலர்ச் செடிகளை இப்படியா பாழாக்குவது? என தருமை மலர்களே, உங்களை அழித்த பாவிகள் ஆயிரம் முறை மடிந்து சாகட்டும்!

"போலீசுக்காரர்கள் அப்பெண்ணின் புலம்பலைக் கேட்டுத் தயங்கி நின்றனர்.

"அம்மா, பயப்படாதீர்கள்! ஒரே வொரு கேள்விக்கு மட்டும் பதில் கூறிவிடுங்கள், போதும். இங்கு சற்று முன்பு ஒரு ஆள் ஓடிவந்தானு?"...போலீசு ஏஜெண்டுகளில் ஒருவன் கேட்டான்.

அப்பெண்மணி அப்போது மாரில் அடித்துக்கொண்டு புலம்பத் தொடங்கிவிட்டாள்."

"ஐயோ, என் அன்பே! உண்மையாகவே நீ இறந்துவிட்டாயா! கேளுங்களய்யா, என் சோகக் கதையை. அவர் ஒரு மாணவர், பிரெஞ்சுக்காரர்......காஸடன் என அவரை அழைப்பார்கள்......இளம் தாடி வளர்த்து வந்தார் அவர்...எப்பொழுதும் நீண்ட தோல் காலணி அணிவார்......ஏன் என்னுடைய உயிர் இன்னும் போகவில்லையோ! அவர் என்னை உயிரினும் பெரிதாய் நேசித்தார்......என் அன்பு ராஜா! ஐயோ, மறைந்தனையோ!"

"இதோ பாரம்மா! என்ன உளறல் இது! நீ யாராவது ஆளைப் பார்த்தாயா?"

"என்னய்யா, காட்டுக் கூச்சல் போடுறே? என் காதலன் மட்டும் இப்பொழுதிருந்தால்......அன்பே, என் கண்ணுளா, ஐயோ, என்னை இப்படியா விட்டுச் செல்ல வேண்டும்!"

"இவ்வாறு கூறிக்கொண்டே அப்பெண்மணி அந்தப் போலீசுக்காரர்கள் இருவரையும் கட்டிக்கொண்டு அழத் தொடங்கிவிட்டாள்.

பைத்தியம்! நல்ல பைத்தியம்!" என்று கூறிக்கொண்டே போலீசுக்காரர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர்.

பிறகு அவள் வீட்க்குள் வந்தாள். இளம் மங்கை தன்னந்தனியாக இருக்கும் வீட்டில் இருப்பது தகாது என்று எண்ணி வெளியேற நினைத்தேன் நான். எனவே தோட்டத்துக் கதவைத் திறந்தேன். அப்போது, "சற்று, பொறுங்கள்!" என்று அன்பு ததும்பும் குரலில் அவள் என்னைப் பார்த்துக் கூறினள்.

அவள் என்னைப் பார்த்த பார்வையில் எவ்வளவோ வாஞ்சையும் அன்பும் நிறைந்திருந்தன. போலீசுக்காரர்களிடம் பைத்தியம்போல் நடந்துகொண்ட அதே பெண்தானு இவள் என்று ஐயமுற்றேன் நான்.

ஆம், அவளேதான் அதே எழில் முகம் வெண்ணிற சால்வை.

"ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? வாருங்கள் வீட்டிற்குள்" என்று அழைத்தாள்.

மறுக்க மனமின்றி அவளைப் பின் தொடர்ந்தேன்.

அந்த அறையில் பல நாடகக் காட்சிகளின் புகைப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன.

"தாங்கள் ஒரு நடிகையா?" என்று கேட்டேன்.

"நடிகை என்று சொல்லிக் கொள்ள முடியாது. துணை நடிகை என்று வேண்டுமானுல் கூறலாம்" என்ருள் அப்பெண்.

"உண்மையிலேயே, நீங்கள் ஒரு பைத்தியம் என்றே நான் நினைத்தேன். நீங்கள் போட்ட கூச்சலைக் கேட்டு! உண்மையிலேயே நீங்கள் உங்கள் பாகத்தை நன்கு நடித்தீர்கள்!"

"இல்லை, அப்படி ஒன்றுமில்லை. எனக்கு எப்பொழுதுமே எனது நடிப்புத் திறமைபற்றி திருப்தி ஏற்பட்டதில்லை. நான் ஒரு குட்டிநடிகை சிறிய பாகங்களையே நடித்து வருபவள். இன்று நான் அவர்கள் முன் நடித்ததுபோல் மோசமாக நடித்திருந்தால், நாடகக் கொட்டகை காலியாகிவிட்டிருக்கும்' என்ருள்.

கர்னல் சிறிதுநேரம் பேசுவதை நிறுத்தினர். பிறகு கூறினர்: "அப்போது நான் அப்பெண்மணியின் கரத்தை முத்தமிட மறுத்துவிட்டேன். எனவே, இன்ருவது அதை நான் செய்ய விரும்புகிறேன்..."

மண்டபத்தில்கரகோஷம் வானைப் பிளந்தது. எந்த அம்மையாருக்குப் பொன்னடை போர்த்துவதற்காக விழா நடத்தப்பட்டதோ அந்த அம்மையாரின் கரங்களை பேச்சாளர் முத்தமிட்டார். அவள் எப்பொழுதுமே சிறிய பாகங்களை வகித்து வந்தவள், எப்பொழுதுமே ஒரு துணைநடிகையாக ஒதுங்கி நின்றவள் என்பதை விளக்குவதுபோல், கூட்டத்தின் தலைவருக்குப் பின்னல் அவளது உருவம் மறைந்திருந்தது!

முகப்பில்:-

வெளியிட்டுள்ள கேலிச் சித்திரம் "டைம்ஸ் ஆப் இந்தியா" [7—3—65] நாளிதழில் வெளிவந்தது.

கைதி எண் 6342



தம்பி!

கதையில், இதுபோல ஒருவருக்குப் பல ஓட்டுகள்—மொத்தத்தில் ஏழு—அளிக்கப்படுவதாக் கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் இதிலே உள்ள வித்தியாசம் என்னவென்றால், ஆஸ்திரேலியாவிலே உள்ளதாகக் கற்பனையாகக் கூறப்படும் ஏழு ஓட்டு முறையில், ஒருவர் அந்த ஏழு ஓட்டுகளையும் ஒரே நேரத்தில் பொதுத் தேர்தலின் போது, உபயோகப்படுத்துகிறார்-இங்கு மூன்று ஓட்டுகளை வைத்திருப்பவர் மூன்று ஓட்டுகளையும், தனித்தனியாக, மூன்று கட்டங்களில், பயன்படுத்துகிறார்.

இங்கு மூன்று ஓட்டு உள்ளவர், மூன்று வெவ்வேறு தேர்தல்களில், கலந்துகொள்ளும் வாய்ப்பும் உரிமையும் பெறுகிறார். கதையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு ஓட்டு முறையில், ஒரே தேர்தலில் ஏழு ஓட்டுகளை அவைகளைப் பெற்றிருப்பவர் உபயோகித்து, ஒரே ஓட்டு பெற்றுள்ள வாக்காளரைவிட, ஏழு மடங்கு வலிவு பெற்றவர்தான் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

சொல்வதில்லையே தவிர, சொல்ல நினைத்தால், இங்கு ஒரு பட்டதாரி ஆசிரியர், சாதாரண வாக்காளரைப் பார்த்து "உன்னைப்போல நான் என்று எண்ணிக்கொள்ளாதே; பொது உறுப்பினர் தேர்ந்தெடுக்க மட்டுமே உனக்கு ஓட்டு உண்டு; அந்த ஓட்டு எனக்கும் உண்டு; ஆனால் பட்டதாரிகள் தொகுதியிலேயும், ஆசிரியர் தொகுதியிலேயும், உனக்கு ஓட்டு இல்லை; எனக்கு உண்டு; நான் உன்னைவிட மும்மடங்கு, தெரிந்துகொள் என்று சொல்லலாம்-வேடிக்கையாக. ஆஸ்திரேலியாவிலேயோ, ஒரே பொதுத் தேர்தலின் போது ஒருவர் மற்றொருவரைவிட, இருமடங்கிலிருந்து ஏழு மடங்குவரை வலிவு காட்டக்கூடியவராகிறார்.

தகுதிகள், தனித்திறமைகள், சிறப்பியல்புகள், ஆகியவைகள் கொண்டவர்கள் மட்டுமேதான் ஆட்சி அமைப்புக் காரியத்தில் ஈடுபடவேண்டும் என்று கூறுவது, ஜனநாயகம் ஆகாது. ஆனால் ஜனநாயகம் என்பதற்காக தகுதிகள், திறமைகள், சிறப்பியல்புகள் ஆகியவைகளுக்குப் பொருளும் பயனும் இல்லாமலே போய்விடவேண்டும் என்று கூறுவதும் சரியாகாது. ஆகவேதான், ஜனநாயக அடிப்படையையும் அழிக்காமல், தனித்தன்மைகளுக்கும் வாய்ப்புத்தர, ஏழு ஓட்டு முறை ஏற்பட்டது என்று கதையில் விளக்கம் தரப்படுகிறது.

இதுபோன்ற முறை தேவையா அல்லவா என்பதற்காக அல்ல, ஜனநாயகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும் என்ற கருத்து இன்று பலரை பலவிதமான புது ஏற்பாடுகள்பற்றி எண்ணிப் பார்த்திட வைக்கிறது என்பதற்காக, இந்தக் கதையிலே காணப்படும் விந்தை முறைபற்றி குறிப்பிட்டுக் காட்டினேன். நெடுநேரம் அன்பழகனும் நானும் இது குறித்தும் இதன் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் பேசிக்கொண்டிருந்தோம். அவர் ஆசிரியர் தொகுதியில் வெற்றி பெற்றவரல்லவா?

22—5—54

வெங்காவும் பொன்னுவேலுவும் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறார்கள்—பொழுது விடிந்ததும் விடுதலை. என் வலப்பக்கத்து அறையிலுள்ள பார்த்தசாரதிக்கும் இடப்பக்க அறையிலுள்ள சுந்தரத்திற்கும்கூடத்தான். இன்று இரவோடு, அந்த நால்வருடன் ஒன்றாகக் கழித்து வந்த சிறை வாழ்க்கை முடிவடைகிறது. அவர்கள் வெளியே செல்கிறார்கள், நான் இன்னும் ஓர் இருபத்தி ஒரு நாட்கள் இங்கு இருக்கவேண்டும். இன்றோடு 19) நாட்கள் ஆகியுள்ளன என்று பொன்னுவேல் கணக்குக் கொடுத்தார். இவர்களுடன் வெளியிலேயும் நெருங்கிப் பழகுபவன்தான் நான் என்றாலும் இந்த ஆறு திங்களாக இருபத்திநாலுமணி நேரமும் ஒரே இடத்தில் இருந்து, பழகி வந்ததை நினைக்கும்போது, இந்தப் பிரிவு மனதுக்குச் சங்கடமாகத்தான் இருக்கிறது. என்னிடம் அவர்கள் கொண்டுள்ள அன்பும், என் நலனைக் கருத்தில் கொண்டு எனக்காகப் பல்வேறு உதவிகளை அவர்கள் செய்வதிலே வெளிப்பட்ட பாச உணர்ச்சியும் என் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும். பார்த்தசாரதி தவிர மற்ற மூவரும் இளமைப் பருவத்தினர்—குடும்பம் மட்டுமே தரத்தக்க குதூகலத்தை — மறந்து அல்ல — இழந்து இங்கு ஆறு திங்களாக அல்லலை

மேற்கொண்டனர். ஒரு தூய காரியத்துக்காகத் தொண்டாற்றுகிறோம் என்ற உணர்ச்சியும் எழுச்சியும் தவிர, இந்த நிலையை இலட்ச இலட்சமாகக் கொட்டிக் கொடுப்பதாகச் சொன்னாலும் ஏற்படுத்த முடியுமா? தூங்கட்டும், பாவம்! நாளையத்தினம் பெற்றோர் மகிழ, உற்றோர் உசாவிட, நண்பர்கள் நலன் விசாரிக்க, இல்லத்தரசி இன்முகம் காட்ட மகிழ்ச்சி அடையப்போகிறார்கள். அவர்களெல்லாம் அதுபோல இன்பமாக வாழவேண்டும் என்பதுதான் என் எண்ணம்; என்றாலும் கன்னல் தமிழ்மொழி காத்திடும் கடமை எழும்போது, எத்தகைய இன்ப நுகர்ச்சியையும் விட்டுக்கொடுத்துவிட்டு, வீறுகொண்டு எழவேண்டும் என்பது என் முறையீடு. என் குரல் கேட்டு, மதிப்பளித்து, இன்ப நிலைமையை இழந்திடும் துணிவு கொண்டு, இங்கு வந்தவர்கள் இந்த நண்பர்கள். நாளையத்தினம், நாட்டினரைக் காணச்செல்கிறார்கள். நாளை மாலை, வெங்காவின் கிராமமான சீதாபுரத்தில், பாராட்டுக்கூட்டமாம். அறப்போரில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்; நாடு அவர்களைப் பாராட்டத்தான் செய்யும். சென்று வருவீர்! சிறையிலே மேலும் பலர் இன்னமும் அடைபட்டுக்கிடக்கிறார்கள் என்ற செய்தியை மக்களிடம் எடுத்துக் கூறிவருவீர்! என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று காலை, கருணாநிதி வந்திருந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளித்தது—பார்த்து இரண்டு மூன்று திங்களாகி விட்டன. கருணாநிதியுடன் கருணாநந்தமும் வந்திருந்தார். தோழர்களின் நலன் குறித்துக் கேட்டறிந்து மகிழ்ச்சி பெற்றேன், கருணாநிதியின் வழக்கு அடுத்த மாதம் மூன்றாவது வாரம் நடைபெறும் என்று அறிந்துகொண்டேன். கூட்ட நிகழ்ச்சிகள், உண்டி திரட்டியது ஆகியவை பற்றிக் கூறிடக்கேட்டு இன்புற்றேன். "அண்ணா, 13-ந் தேதி நிச்சயமாக விடுதலை தானே? காலையிலே எத்தனை மணிக்கு அனுப்பிவைப்பீர்கள்?" என்று ஆவலுடன் கேட்ட கருணாநிதியின் கேள்விக்கு, அதிகாரி அழகான ஒரு புன்னகையைப் பதிலாகத் தந்தார்.

இன்று மாலை என்னைக் காண ராணி, பரிமளம், சரோஜா மூவரும் வந்ததாகவும், காலையிலேயே பார்க்கும் முறை தீர்ந்துவிட்டதால் இன்று பார்ப்பதற்கு இல்லை என்றும் கூறி திருப்பி அனுப்பிவிட்டதாகக் கேள்விப்பட்டேன்.

பார்த்தசாரதி, இத்தனை நாட்களாகப் பார்த்துவந்த சமையல் நிர்வாகத்தை எப்படிச் செம்மையாகச் செய்வது என்ற நுணுக்கங்களை, புதிய நிர்வாகி காஞ்சிபுரம் தோழர் சம்பந்தத்திடம் விளக்கிக்கொண்டிருந்தார். சம்பந்தத்துக்கு இது புதிதுமல்ல, பிரமாதமுமல்ல. இங்கு 16 பேர்தானே, செங்கற்பட்டு சிறையில் அவருடைய நிர்வாகத்தில் 55 பேர் இருந்துவந்தார்கள் என்று காஞ்சிபுரம் தோழர்கள் பூரிப்புடனும் பெருமையுடனும் பேசினார்கள்.

23—5—64

இன்று, பார்த்தசாரதி, சுந்தரம், பொன்னுவேல், வெங்கா ஆகிய நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர். காலை 5-30-க்கே நான் எழுந்துவிட்டேன். நண்பர்களை வழி அனுப்பிவைக்க. நால்வரும், இங்குள்ள நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு 6-30 சுமாருக்குச் சென்றனர். சிறை உடைகளைக் களைந்துவிட்டு அவர்கள் தங்கள் சொந்த உடை அணிந்துகொண்டு, எங்களிடம் விடை பெற எதிரே நின்றபோது, ஒரு புதிய பொலிவு அவர்கள் முகத்திலே மலர்ந்தது. வெளியே செல்கிறோம் அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள் இதோ விடுதலை பெற்று வந்திருக்கிறார்கள் என்று ஆயிரமாயிரம் தோழர்கள் சுட்டிக்காட்டி மகிழப் போகிறார்கள். அறப்போரின் அருமை பெருமையினை அறிந்தவர்கள் பெருமிதம் கொள்ளப் போகிறார்கள், பெற்றோரும் இல்லத்தின் மற்றவர்களும், சிறை சென்றுள்ளனரே, நமது செல்வங்கள் எப்படி அவர்களைப் பிரிந்திருப்பது, உடல் நலம் கெடாமல் இருக்கவேண்டுமே, என்றெல்லாம் கொண்டிருந்த கவலை நீங்கப் பெற்று, வந்துவிட்டனர் எமது செல்வங்கள், பொலிவளிக்கும் புன்னகை தவழும் முகத்துடன் வந்துவிட்டனர் என்று கூறி மகிழ்ச்சி பெறப் போகிறார்கள் என்ற எண்ணம், விடுதலை பெற்ற நால்வருக்கும், புதிய தெம்பையும் நடையிலே ஒரு மிடுக்கையும் தானாகக் கொண்டுவந்து சேர்த்துவிட்டது. அவர்களை அந்த நேரத்தில் காண்பவர்களின் கண்களில் இவர்கள் சற்று முன்புவரை கைதிகளாக இருந்தவர்கள் என்று எண்ணிடக்கூடத் தோன்றாது; அத்தகைய ஒரு புதுப் பொலிவு பெற்றனர். அவர்களை வழி அனுப்பி வைத்துவிட்ட பிறகு, அன்று முழுவதும் எனக்கு, அடிக்கடி அவர்கள் பற்றிய நினைவாகவே இருந்தது. அதிலும், எதற்கெடுத்தாலும், வேடிக்கையாக, சுந்தரத்தைக் கூவிக் கூவி அழைப்பது இந்த ஆறு திங்களாக எனக்குப் பழக்கமாகி விட்டிருந்ததால், அந்த நினைவு மேலோங்கியபடி இருந்துவந்தது. சுந்தரம்! சுந்தரமூர்த்தி சுந்தரமூர்த்தி நாயனார்!—என்று இப்படி மாறி மாறிக் கூப்பிட்டபடி இருப்பேன்—அவர்கள் வெளியே சென்றுவிட்ட பிறகு. அந்த அறைகள் வெறிச்சிட்டுப் போய்க் கிடந்தன.

வெளியே நல்ல கூட்டம்—வரவேற்பு என்று காவலாளிகள் பேசிக்கொண்டார்கள்—விவரங்கள் கூறுவாரில்லை. நாங்களாக, இப்படி இருந்திருக்கும், இன்னின்னார் வந்திருப்பார்கள், இப்படி இப்படிப் பேசி மகிழ்ந்திருப்பார்கள் என்று இங்கு இருந்தபடி கற்பனை செய்து கொண்டிருந்தோம்—அதிலேயும் ஒரு சுவை கிடைக்கத்தான் செய்தது.

முன்பே செய்திருந்த ஏற்பாட்டின்படி, சமையல் நிர்வாகப் பொறுப்பை காஞ்சிபுரம் சம்பந்தம் மேற்கொண்டார். சுந்தரமூர்த்தி நாயனார் வெளியே சென்றுவிட்டார், இனி சம்பந்தர் துணைதான் நமக்கு என்று வேடிக்கைக்காகக் கூறினேன், எந்தக் காரியத்தையும்

பொறுப்பாகவும் அமைதியாகவும், தமது திறமை பற்றி எதுவும் பேசாமலும் பெருமை கூறிக் கொள்ளாமலும் செய்து முடிப்பவர், சம்பந்தம்—அடக்கமான இயல்பு.

இப்போது, எனக்கு வலப்புறமும் இடப்புறமும், பார்த்தசாரதி, சுந்தரம் இருந்த அறைகளில், சம்பந்தமும் மணியும் குடியேறி உள்ளனர். இரவு என் அறையில், மணியும் திருவேங்கிடமும்.

இன்றிரவு நீண்டநேரம் செங்கற்பட்டு மாவட்ட கழக நிலைமைகள் குறித்து, மணியிடம் பேசிக்கொண்டிருந்தேன். என்னுடைய நலனைக் கவனித்துக் கொள்வதிலே மிகுந்த அக்கறை கொண்டுள்ள மணி, சம்பந்தம், திருவேங்கிடம் ஆகியோர், நான் விடுதலை பெற்ற பிறகும் இங்கே இருக்கவேண்டியவர்கள். சுந்தரம், பார்த்தசாரதி, ஆகியோர் வெளியே சென்றுவிட்டதால் என் நலனைக் கவனித்துக் கொள்வதில் புதிய பொறுப்பு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கொண்டு அன்பழகன் மெத்த உதவிகள் செய்கிறார்.

இன்று மாலை, ராணி, பரிமளம் சரோஜா மூவரும் என்னைக் காணவந்திருக்கிறார்கள்; இன்று அனுமதிக்க முடியாது, திங்கட்கிழமை வரலாம் என்று அதிகாரிகள் கூறித் திருப்பி அனுப்பிவிட்டதாகத் தெரியவந்தது. அன்பழகனைக் காணவந்த வெற்றிச் செல்வியையும் அதுபோலவே திருப்பி அனுப்பிவிட்டிருக்கிறார்கள்; அவர்கள் வீடுசென்று, சிறை மேலதிகாரியிடம் தொலைபேசிமூலம் கேட்டிருக்கிறார்கள். இன்று எனக்கு என் கணவரைப்பார்க்கும் அனுமதி இருந்தும் திருப்பி அனுப்பிவிட்டார்களே, ஏன்? என்று. அதற்குப் பிறகு, வெற்றிச் செல்விக்கு அனுமதி தரப்பட்டது. அவர்கள் அன்பழகனை வந்துபார்த்து, இந்தத் தகவலையும் ராணியைத் திருப்பி அனுப்பிவிட்டதுபற்றியும் கூறி இருக்கிறார்கள். இன்று சர்க்கார் விடுமுறை நாளாம்—ஆகவே சீக்கிரமாகவே பூட்டிவிடவேண்டும் என்று கூறி, வெளியே மஞ்சள்வெயில் அடித்துக்கொண்டிருக்கும்போதே எங்களை அறைகளில்போட்டுவிட்டார்கள். ரஷியாவில் தூக்கம் வருகிறவரையில், புரட்சி வெற்றிபெற்ற காலத்திற்கும் புதியசமுதாய அமைப்பு பலமடையும் காலத்திற்கும் இடையே இருந்த நிலைமைகளை விளக்கும், பல சிறுகதைகள்—ரஷிய எழுத்தாளர்கள் தீட்டியவை — கொண்ட ஏடுபடித்துக் கொண்டிருந்தேன். சிறை வாழ்க்கைபற்றிய ஒரு சிறு கதை, மனதை உருக்கும்விதமாக இருந்தது. அதைப் பற்றிச் சிந்தித்தபடியே கண் அயர்ந்தேன்.

24—5—64

ஞாயிற்றுக்கிழமை — ஓய்வு நாள் — சிறையில் வறட்சி நிரம்பிய நாள். இந்த வறட்சியை நீக்கும் வகையில், இன்று காலை பத்து மணிக்கு மருத்துவ மனை சென்றிருந்த மதியழகன் இங்குவந்து சேர்ந்தார். கடந்த பதினைந்து நாட்களாக, மருத்துவ மனையில் இருந்துவிட்டு வருகிறார் — சிறையில் உள்ளவர்களுக்கு, இவ்விதம் வெளியில் இருந்து வருகிறவர்களைக் கண்டதும் ஒரு தனி மகிழ்ச்சி பிறப்பது இயல்பல்லவா—சேதிகள் கேட்டறிந்து கொள்ளும் வாய்ப்பு என்பதால். மருத்துவ மனையில் தமக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை பற்றி விவரமாக மதி கூறினார். விடுதலையான, வெங்கா, பொன்னுவேல், பார்த்தசாரதி ஆகியோர் நேற்று மருத்துவ மனை வந்து தன்னைப் பார்த்ததாகவும், சில நாட்களுக்கு முன்பு, ராஜாராம் எம். பி., என். வி. நடராசன்; எம். எல். சி., அரங்கண்ணல், எம். எல். ஏ., குத்தூசி. குருசாமி, மற்றும் பலர், வந்து நலன் கேட்டுச் சென்றதையும் கூறினார். சென்னைக் கடைவீதி யொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கியவர்களை, மருத்துவ மனையில் பார்த்ததை, மதி கூறிடக் கேட்கும்போது, மிகவும் வேதனையாக இருந்தது. பயங்கரமான விபத்து என்று தெரிகிறது, மிகப் பரிதாபகரமான சாவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்தனை உயிர்களைக் காவு கொண்ட, அத்தகைய ஆபத்தான வெடிமருந்துகளை எத்தகைய இடத்தில், எவ்விதமான முறையில் வைத்திருக்க வேண்டும் என்ற கட்டு திட்ட முறைகளே இல்லையா, இவ்விதமான பயங்கரமான விபத்து ஏற்படக் கூடிய விதத்திலா நிலைமை இருந்திருக்க வேண்டும் என்பன பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். மதியழகன் நேரிலே அந்த விபத்திலே சிக்கிக்கொண்டவர்களைப் பார்த்துவிட்டு வந்த விவரம் கூறக் கேட்டபோது மனம் மிகவும் வேதனைப்பட்டது.

25—5—64

இன்று காலை பத்துமணிக்குமேல், மேயர் கிருஷ்ணமூர்த்தி துணைமேயர் கபாலமூர்த்தியுடன் என்னைக் காண வந்திருந்தார். முன்பு இரண்டொருமுறை முயற்

விற்பனையாகிறது!

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்!
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

சித்தும் மேயர் என்னைக்காண உரியநேரத்தில் அனுமதி கிடைக்கவில்லை. சில ஆண்டுகளாக என்னிடமும் கழகத் தோழர்களிடமும் நட்புகொண்டு பழகிவரும் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இனிய இயல்பு படைத்தவர். அவர் மேயராக வேண்டுமென்று கழகம் எடுத்துக் கொண்ட முதல் முயற்சி வெற்றிபெறுமற் போனபோது நான் சங்கடப்பட்டேன்; அப்போதுகூட அவர், வெற்றி கிட்டாததுபற்றிக் கவலை இல்லை, நீண்ட பல ஆண்டுகளாக நான் எந்தக் கம்யூனிஸ்டு கட்சியுடன் இணைந்து பணியாற்றி வந்திருக்கிறேனே அந்த கம்யூனிஸ்டு கட்சி, காங்கிரசுடன் கூடிக்கொண்டு எனக்குத் துரோகம் செய்த அதே நேரத்தில், கழகத்தோழர்கள் கட்டுப்பாடாக இருந்து எனக்கு ஆதரவு அளித்த பெருமையும் மகிழ்ச்சியுமே எனக்குப் போதும் என்று கூறினவர்.

மேயர் பொறுப்பிலே ஈடுபட்டதிலே ஏற்பட்ட அனுபவங்கள்பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார் துணைமேயருடன், அப்போதுகூட நகரில் பல பகுதிகளைப் பார்வையிட்டுவிட்டு வருவதாகச் சொன்னார்.

எளிய வாழ்க்கையினரான அந்த நண்பருடைய தொண்டு நகருக்குக் கிடைத்திருப்பது நல்லதோர் வாய்ப்பாகும். அவர் தொடர்புகொண்டுள்ள கம்யூனிஸ்டு கட்சியின் இன்றைய பிரச்சினைபற்றிச் சில கூற ஆரம்பித்தார்; அந்தப் பேச்சை மேற்கொண்டு விரிவாக்காதபடி நான் வேறு விஷயங்களைப் பேசலானேன்.

மாலையில் ராணி, பரிமளம், சரோஜா மூவரும் வந்திருந்தனர். மூவருக்குமேல் அனுமதி கிடையாது என்பதால், கௌதமன் வெளியிலேயே நிறுத்தப்பட்டு விட்டதாகக் கூறினார்கள். அனைவருடைய நலன்பற்றியும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

இன்று இரவு, காஞ்சிபுரம் அறப்போரில் ஈடுபட்ட கோவிந்தசாமி குழுவினர் வழக்கில், அளிக்கப்பட்ட தீர்ப்பு விவரம் படித்துக்கொண்டிருந்தேன்.

மாலை அணிவித்தார்கள். கொடிகளைக் கொடுத்தார்கள், சென்றுவருவீர்! வென்றுவருவீர்! என்று முழக்கமிட்டு உற்சாகமூட்டினார்கள், ஆகவே தோழர்கள் சி.வி.எம். அண்ணாமலை, மார்க், சபாபதி, நெல்லிக்குப்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, காட்டுமன்னார்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், (இ. பி. கோ. 120) சதிக்குற்றம் செய்தவர்களாகிறார்கள் என்ற போலீஸ் தரப்பு வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொள்ளவில்லை— அதற்கான விவரத்தைத் தமது தீர்ப்பிலே கூறியிருந்தார்.

இதேபோன்ற வழக்குதான் கருணாநிதி, நடராசன் ஆகியோர்மீது மதுரையில் தொடரப்பட்டது; ஆனால் அங்கு அவர்களுக்கு நீதிமன்றம் ஆறுதிங்கள் கடுங்காவல் தண்டனை என்று அளித்திருக்கிறது.

சி. வி. எம். அண்ணாமலையும் மற்றவர்களும், சட்ட விரோதமான செயலில் ஈடுபடக்கிளம்பிய கோவிந்தசாமி குழுவினருக்கு மாலை அணிவித்தனர், அந்தச் செயல், அவர்களைக் குற்றம் செய்யச் சதி செய்தவர்களாக்குகிறது என்ற போலீஸ் வாதத்தை நீதிபதி ஏற்றுக்கொள்ள மறுத்து, ஆறும் குற்றவாளி (அண்ணாமலை) தமது கட்சித் தோழர்களுக்கு மரியாதை தெரிவிக்க மாலை அணிவித்ததாகக் கூறியுள்ளார்; மாலை அணிவித்ததை மட்டுமே ஆதாரமாக வைத்துக் கொண்டு, மாலை அணிவித்தவர்களும் சதியில் பங்கு கொண்டவர்களாகிறார் என்ற முடிவுக்கு வருவதற்கில்லை. ஒன்றுகூடி, கூட்டாக ஒரு குற்றம் செய்வது சதி என்று ஆகிறது. போலீஸ்தரப்பிலே தரப்பட்ட சான்று 17 எண் முதல் ஐந்து குற்றவாளிகள் மட்டுமே அரசியல் சட்டத்தைக் கொளுத்த வேண்டும் என்று தி. மு. க. தலைவர்கள் பணித்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அந்த ஐவரும், அதுபோல் செய்திட ஏற்கனவே முடிவெடுத்துள்ளனர் என்பதும் போலீஸ் தரப்பு தந்த சான்று மூலமே தெரியவருகிறது. ஆகவே முதல் ஐந்து எதிரிகளுள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தும்படி, சதி செய்யவேண்டிய அவசியம் மற்ற எதிரிகளுக்கு இல்லை.

ஏழாவது குற்றவாளி (சபாபதி) கழகக் கொடிகளை முதல் ஐந்து எதிரிகளிடம் கொண்டுவந்து கொடுத்தார் என்று கூறப்பட்டது. கொடுத்ததாகவே வைத்துக் கொண்டாலும், அதனாலேயே ஏழாவது எதிரி சதி செய்தார், உடந்தையாக இருந்தார் என்று கூறிவிட முடியாது — என்று நீதிபதி தமது தீர்ப்பில் விளக்கம் அளித்திருக்கிறார். அரசியல் சட்டத்தை இன்ன இடத்தில், இன்னின்னார் கொளுத்தப்போகிறார்கள் என்று முன்னதாகவே சுவரொட்டிகள் மூலம் அறிவித்திருப்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். தீர்ப்புபற்றி மணியுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

26—5—64

இன்று மதியழகன் விடுதலை. அவர் உள்ளிட்ட பதினைந்து தோழர்கள் — மூன்று அணியினர் இன்று காலை விடுதலை செய்யப்பட்டனர். விடியற்காலை ஐந்தரை மணிக்கே, அறையைத் திறந்துவிட்டார்கள். எங்கள் அறைகளைத் திறக்கவில்லை. விடுதலை பெற்று வெளியே செல்லும் மதியிடம் அளவளாவக்கூட இயலாதுபோலிருக்கிறதே என்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தேன், அரைமணி நேரத்திற்குப் பிறகு, எங்கள் அறைகளையும் திறந்தார்கள் — அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு மதி புறப்பட்டார்; மற்றத் தோழர்களை எந்தப்பக்கமாக அழைத்துக்கொண்டு சென்றார்களோ, தெரியவில்லை; நான் அவர்களைக் காண இயலவில்லை. நாங்கள் உள்ள பகுதியிலிருந்து, வெளிப் பக்கத்தைக் கூர்ந்து பார்த்தபடி நின்றுகொண்டிருந்தோம். எதிர்ப்புற நெடுஞ்சாலையில் செல்லும் மோட்டார்கள், சிறை அருகே வந்ததும், நகர்ந்து செல்லக்கண்டு

தோழர்கள் கூட்டமாக வந்திருக்கிருர்கள் என்று உணர்ந்துகொண்டோம். சில கொடிகள் அசைவது கூடத் தெரிந்தது. சில நிமிடங்களுக்குப் பிறகு, வாழ்த் தொலியும், முரசொலியும் கேட்டது. மதியையும் மற்ற தோழர்களையும் வரவேற்க கழகத்தோழர்கள் மெத்த ஆர்வத்துடன் வந்திருக்கிருர்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியுற்ருேம்.

இன்று வழக்கமான பார்வையிடல்-மதி இல்லை.

நண்பர் ஏ. கோவிந்தசாமிக்கு, இரண்டு நாட்கள் பரோலில் செல்லும் அனுமதி கிடைத்தது-காலை பத்து மணுக்குமேல் அவர் சென்ருர்-கடலூரில் தமது உடன் பிறந்த அம்மையாருக்கான இறுதிச் சடங்கிலே கலந்து கொண்டு மீண்டும் 28ந் தேதி இங்கு வருகிருர், அவரை வழி அனுப்பிவைத்தோம்.

இரண்டு நாட்களாக பத்திரிகைகள் எதுவும் எமக் குத் தரப்படவில்லை. பத்திரிக்கைகள் தரப்டுதிவதிலே அடிக்கடி முறைக் குறைவுகள் எற்பட்டு வருவதுண்டு என்ருலும், ஒரே அடியாகப் பத்திரிகைகள் தரப்படா தது இந்தத்தடவைதான். பல முறை கேட்டனுப்பிய பிறகு, பிற்பகல் மூன்று மணிக்கு இரண்டு நாட்களுக் கான பத்திரிகைகளையும் மொத்தமாக அதிகாரிகொடுத் தனுப்பினர். நாலைந்து குழந்தைகள் உள்ள வீட்டிலே, பெற்ருேர்தின்பண்டம் கொண்டுவந்ததும் அந்தக் குழந் தைகள் ஆவலுடன் ஓடோடிச் சென்று மொய்த்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா! பத்திரி கைக் கிடைத்ததும் நாங்கள் எல்லோருமே தின்பண் டம் கண்டதும் மொய்த்துக்கொள்ளும் குழந்தைகளாகி விடுகிருேம்.

ஷேக் அப்துல்லாவின் பாகிஸ்தான் பயணம் பற் றிய செய்தி விரிவாக வெளியிடப்பட்டிருந்தது.

எந்த பாகிஸ்தான், காஷ்மீர்மீது பாய்ந்து, பகுதி யைத் தன் பிடியில் சிக்கச் செய்துவிட்டதோ அந்த பாகிஸ்தானில், ஷேக் அப்துல்லாவுக்கு மகத்தான வரவேற்பு.

எந்த பாகிஸ்தானுடைய தாக்குதலைச் சமாளிப் பதற்காக இந்திய துருப்புகளின் துணையைத் தேடிப் பெற்ருரோ, அந்த அப்துல்லாவுக்கு, தாக்குதல் நடத் திய பாகிஸ்தானில் வரவேற்பு.

எந்த அப்துல்லா, பாகிஸ்தானுடன் கூடி காஷ்மீர் அரசைக் கவிழ்க்கச் சதி செய்தார் என்று குற்றம் சாட்டி 11 ஆண்டுகள் சிறையில் அடைத்து வைத் ததோ அதே இந்திய துரைத்தனம் அதே ஷேக் அப் துல்லாவை, அதே பாகிஸ்தானுக்கு, சென்று வருக! செம்மையான சமரசம் மலர வழி கண்டு கூறுக! என்று கூறி அனுப்பி வைத்திருக்கிறது.

எத்தனை எத்தனை விந்தை நிகழ்ச்சிகள்—என் னென்ன விதமான திடீர் திருப்பங்கள், அரசியலில் என்பது பற்றி நண்பர்களுடன் பேசிக்கொண் டிருந்தேன்.

27—5—64

இன்று பிற்பகல் 3 மணிக்குத் திடுக்கிடத்தக்க செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றேன். இங்கு உள்ள கொடி மரத்தில், கொடி திடீரென பாதிக் கம்பத்துக்கு இறக்கப்பட்டது; விவரம் புரியாமல் கலக்கமடைந்தபடி, காவலாளிகளைக் கேட்டதற்கு, நேரு காலமாகி விட்டா ராம் என்று கூறினர்—நெஞ்சிலே சம்மட்டி அடி வீழ்ந் தது போலாகிவிட்டது; நம்ப முடியவில்லை, நினைக்கவே நடுக்கமெடுத்தது; காலை இதழிலேதான், நேரு டேரா டன்னிலிருந்து உற்சாகத்துடன் டில்லி திரும்பினர், விரைவில், அயூப்கானைச் சந்திப்பார் என்று மகிழ்ச்சி தரும் செய்திகளைப் பார்த்தோம்; பிற்பகல் 3 மணிக்கு, அவருடைய மறைவு பற்றிக் கேள்விப்பட்டால், எப்படி மனம் நிலைகொள்ளும். சரியாக விசாரியுங்கள்—அதி காரியையே கேளுங்கள் என்று கூவினேன். அரக் கோணம் ராமசாமி சிறை அதிகாரியைக்கண்டு கேட்டு விட்டுத் திரும்பினர்; அவருடைய நடையிலே காணப் பட்ட தளர்ச்சியும் முகத்திலே கப்பிக்கொண்டிருந்த துக்கத்தையும் கண்டேன் — நடைபெறக் கூடாதது நடந்துவிட்டது — துளியும் எதிர்பாராதது ஏற்பட்டு விட்டது என்று உணர்ந்தேன்—சில நிமிடங்கள் கல் லாய்ச் சமைந்து போனேன். எல்லோருமே கண் கலங் கிப் போயினர். நேரு போய்விட்டாரா—ஒளி அணைந்து விட்டதா—உலகமே அதிர்ச்சி அடையத்தக்க இழப்பு ஏற்பட்டு விட்டதா — அய்யய்யோ! — எப்படி இதனை நாடு தாங்கிக் கொள்ளப் போகிறது என்றெல்லாம் எண்ணி வேதனைப்பட்டேன். பண்டித நேரு, ஒரு சகாப் தத்தை நடத்தி வைத்தவர்—வெறும் அரசியல் கட்சித் தலைவராக மட்டும் இருந்து வந்தவர் அல்ல. உலகத் தலைவர்களிடையே அவருக்கு இருந்துவந்த நட்பும தொடர்பும், இங்கு மட்டுமல்ல, உலகிலேயே ஒரு போரற்ற பூசலற்ற காலத்தை உருவாக்கும் நிலை மையை மலரச் செய்தது. காங்கிரஸ் கட்சியிடமும், ஆட்சி முறையிடமும் கசப்பும் கொதிப்பான கோபமும் கொண்டபோதெல்லாம்கூட, பண்டித நேருவுடைய சிறப்பு இயல்புகள், அறிவாற்றல், தனித்தகுதி, பண்பு, ஆகியவைகள் நான் மறந்ததுமில்லை, நமது கூட்டங் களிலேயே எடுத்துச் சொல்லத் தவறியதுமில்லை. அவர் சிறந்த ஜனநாயகவாதி என்பதை உள்ளூர உணர்ந்து, உவகையுடன் கழகத் தோழர்களுக்குக் கூறிவந்திருக்கிறேன். இந்தி திணிப்பு விஷயத்தில்கூட, தென்னக மக்களின் எதிர்ப்புக்குரலுக்கு மதிப்பளிக்கத் தவருதவர் நேரு பண்டிதர். நமது இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் மூலம் 1965-ல், இந்தி பற்றிய புதிய சட்டம் பிறந்திடும்போது, நேருவுடைய மனதிலே ஒரு நல்ல மனமாற்றத்தை ஏற்படுத்தி வைக்கலாம் என்று நம்பிக்கைக் கொண்டேன், அதனையும் கழகக் கூட்டங் களில் தெரிவித்திருக்கிறேன். அவரிடம் பேசி அறியா தவன், தான். நான் ராஜ்ய சபையில் பேசியதையும் அவர் இருந்து கேட்கவில்லை. ஆனல் நான் பேசியான மறுநாள், பண்டித நேரு பேசுகையில், இரண்டு மூன்று

முறை என் பேச்சைக் குறிப்பிட்டுக் காட்டி சிலவற்றை ஒப்புக்கொள்வதாகக் கூறிப்பேசினுர். அந்தப் பேச்சின் போது, அவருடைய பார்வை என்மீது பலமுறை வீழ்ந்தது—அந்தக் காட்சி இப்போதும் தெரிவது போலிருக்கிறது.

பாராளுமன்றத்திலே, நான் பார்த்திருக்கிறேன்—வியப்படைந்திருக்கிறேன் — காங்கிரஸ் ஆட்சியாளர் அதனைக் கண்டும் பாடம் பெறவில்லை என்று வருத்தப்பட்டிருக்கிறேன் — நேருவின் பேச்சிலே குறுக்கிட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோபதாபத்துடன், எரிச்சல் ஏளனத்துடன், காரசாரத்துடன் பல பேசுவார்கள் —துளியும் பதருமல், ஒரு ஐம்பது ஆண்டுக் கால வரலாற்றை உருவாக்கிய அந்தப் பெருந்தலைவர், ஜனநாயகத்திலே இது தவிர்க்க முடியாதது என்று மட்டுமல்ல இது தேவைப்படுவது, வரவேற்கப்பட வேண்டியது என்ற பண்புணர்ச்சியுடன் பதில் அளிப்பார்—அத்தகைய ஒரு ஜனநாயகச்சீமான் மறைந்துவிட்டார்.

விவரம் தெரியவில்லை, ஏன், எப்போது, எங்கே, காலமானுர் என்ற தகவல்ஏதும் தெரியவில்லை. வேதனை அதிகமாக வளர்ந்தது.

என்னைக்காண கருணுநிதி வந்திருப்பதாக அழைத்தார்கள்—நடந்துசென்றபோது, எங்கோ காற்றின்மீது நடப்பதுபோல ஒரு உணர்வு. கருணுநிதியும் அரங்கண்ணலும் வந்திருந்தார்கள், சர்க்காரிடம் தனி அனுமதிபெற்று. வேதனை தோய்ந்த என் முகத்தைக் கண்டார்கள்—அவர்களின் கண்கள் கசிவதை நான் பார்த்தேன். விவரம் கேட்டேன் — தெரிவித்தார்கள். அனுதாபச் செய்திவேண்டும் என்ருர்கள் — எழுதும் நிலை இல்லை — மனக்குமுறல் எண்ண ஓட்டத்தையே ஒடித்துவிட்டிருந்தது. மனதிலே கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணக் குவியலில், இரண்டொன்றை எழுத்தாக்கிக் கொடுத்தேன். இது, ஒரு கட்சிக்கு ஏற்பட்ட இழப்பு அல்ல — நாட்டுக்கு — ஆகவே, நாட்டவருடன் கழகத்தவர் இந்த துக்கத்தில் பங்கேற்றுக் கொள்ளவேண்டும் — கூட்டங்கள், ஊர்வலங்கள் வேண்டாம் என்று கூறி அனுப்பினேன்.

நண்பர்களுடன், நேரு மறைவுபற்றித்தான் பேசிப் பேசி ஆறுதலைத் தேடிக்கொள்ள முயன்று வருகிறேன்.

28—5—64

வேதனை நிரம்பியநிலை நீடித்தபடி இருக்கிறது. வேறு எந்த விஷயத்திலும் மனம் செல்லவில்லை.

பரோல்முடிந்து சிறை திரும்பிய நண்பர் கோவிந்தசாமி ஊரே துக்கத்தின் பிடியிலே சிக்கிக்கிடப்பது பற்றி விவரம் கூறினுர். எல்லாக் கட்சிகளையும்கொண்ட மவுன ஊர்வலம் நடப்பதாகத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு — டில்லிநகர் நோக்கி என் எண்ணம் சென்றது. எத்தகைய புகழ் மிக்க ஒரு வரலாறு, தீயிலிடப்படுகிறது; எத்தகைய பொன்னுடலுக்கு எரியூட்டுகிருர்கள், என்பதை எண்ணி எண்ணி விம்மிக்கிடந்தேன்.

30—5—64

இன்று அரக்கோணம் தோழர் இராமசாமி எம். எல். ஏ. விடுதலையானுர். விடியற்காலை ஐந்துமணிக்கே அவரை அழைத்துச்சென்றுவிட்டனர், மற்ற எவருடைய அறையையும் திறக்கவில்லை, ஆகவே, அவர் விடுதலையாகி வெளியே செல்லும்போது நண்பர்கள் அவருடன் அளவளாவி விடைதந்தனுப்பும் வாய்ப்பும் பெறவில்லை. நான் தூங்கிக்கொண்டிருந்தேன், எழுப்ப முயற்சித்து, பிறகு வேண்டாமென்று விட்டுவிட்டார்களாம்; காரணம் எனக்கு நேற்று இரவெல்லாம் அடிவயிற்றிலும் இடுப்பிலும் வலி கண்டு மெத்தத் தொல்லைப்பட்டேன்; மூன்றுமணி சுமாருக்குத்தான் தூக்கம் பிடித்தது, ஆகவே என்னை எழுப்பலாகாது என்று இருந்துவிட்டனர். நான் எழுந்தபிறகு இதைக் கூறினுர்கள், வருத்தப்பட்டேன். நண்பர் ராமசாமியிடம் நேற்று மாலை நேடுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். மிகவும் அமைதியான வாழ்க்கையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள ராமசாமி அறப்போரில் ஈடுபட்டுச் சிறை புகுவார், என்று அவருடைய நெருங்கிய நண்பர்களே கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அவர் சிறை புகுந்தது அரக்கோணம் வட்டாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். தக்கோலம் எனும் கிராமத்தில், மதிப்புள்ள ஒரு பெரிய விவசாயக்குடும்பத்துத் தலைவர், ராமசாமி. கழகத்துக்குக் கிராமத்தில் இத்தகையவர்கள் நிரம்பக் கிடைக்கவேண்டும்; கிராமத்திலே குறிப்பிடத்தக்கநிலை பெற்றவர்கள் இதுபோல, பொதுவாழ்வுத் துறையில் ஈடுபடுவதும், கொள்கைக்காகக் கஷ்ட நஷ்டம் ஏற்பதும், அவர்கள் ஈடுபட்டுள்ள இயக்கத்துக்கு மட்டுமல்ல, மக்களாட்சி முறைக்கே வலிவும் பொலிவும் ஏற்படுத்தும் என்பதிலே ஐயமில்லை. அரசியல் என்பதே, பளபளப்பான பட்டணக் கரைகளில் உள்ள பணக்காரர், படித்தவர்கள் ஆகியோருக்கென்றே அமைந்துள்ளதுறை என்ற எண்ணம் மாறி,


GIRIJA'S Coffee

கிரிஜா காப்பித்தூள்

குணம், மணம், ருசி, இவற்றில் சிறந்தது

100 சுயம்

கிடைக்குமிடம்: போன்: 75833

கிரிஜா காபி ஒர்க்ஸ்,

காபி வெண்ணெய், நெய் வியாபாரம்,

5/76 ராயப்பேட்டை ஹைரோடு

மைலாப்பூர், சென்னை-4.

கிராமத்தில் குறிப்பிடத்தக்க நிலையிலுள்ளவர்கள், ஈடு பட்டு, செம்மைப்படுத்தி, நாட்டுக்கு நல்லாட்சி ஏற் படுத்தி, முனையவேண்டிய துறை அரசியல் என்ற எண்ணம் வலுபெறவேண்டும்.

திகைப்பு, உள்ளக் குமுறல், அதிர்ச்சி ஆகியவை காரணமாக இரண்டு நாட்களாக எனக்கு உடல் நலிவு ஏற்பட்டுவிட்டது. குனிய நிமிர முடியாதபடி இடுப்பிலே வலி; தைலம் தடவியும் சுடுநீர் ஒத்தடம் கொடுத்தும் என் நலிவைப்போக்க, மணி-மிக்க அன்புடன் முயன்று வந்தார். அன்பழகன் இத்தகைய நலிவுகள் போக, மருத்துவ முறைகள் பல அறிந்திருக்கிறார், அவரும் எனக்கு உதவியாக இருக்கிறார்.

நேரு மறைவு, நாட்டிலே எப்படி ஒரு இருளையும் வெறிச்சிட்டுப்போன நிலைமையையும் உண்டாக்கி விட்டதோ, அதுபோன்று என்மனதிலேயும் ஒரு வெறிச் சிட்ட நிலையை உண்டாக்கிவிட்டது. வழக்கமாக எழும் அரசியல் பேச்சுகள் இல்லை; படிப்பதற்கும் மனம் இடம் தரவில்லை.

நேருவின் இறுதிபற்றி உலகப் பெருந்தலைவர்கள் அனுப்பிய இரங்கற் செய்திகளையும், டில்லியில் அவர் உடலுக்கு எரியூட்டியதுபற்றிய செய்திகளையும் பத்தி ரிகைகளில் படிக்கப்படிக்க, வேதனையும் உருக்கமும் வளர்ந்துகொண்டு இருந்தது.

இந்த முறை, நான் சிறை புகுந்ததுமுதல், என் மனதுக்கு அதிர்ச்சியும் வேதனையும் மூட்டிவிடத்தக்க இழப்புகள் பல நேரிட்டுவிட்டதை எண்ணிக்கொண் டேன். விரைவாக மனவேதனையை நீக்கிக்கொள்ளக் கூடிய இயல்பும் எனக்குக் கிடையாது. சிறையிலே எனக்கு அமைந்துள்ள வாழ்க்கை முறையால் எனக் குத் தொல்லை அதிகம் இல்லை; என் தேவைகள் மிகவும் குறைவானவை. ஆகவே சிறையில் இது கிடைக்க வில்லை, அது கிடைக்கவில்லை என்ற சங்கடமே எழுவ தில்லை. ஆனால், உள்ளத்து நெகிழ்ச்சி மிகஅதிகமாகிக் கொண்டுவருகிறது. துக்கமோ, திகைப்போ, உருக் கமோ, அதிர்ச்சியோ இதுபோன்ற எந்தவித உணர்ச்சி எழுந்தாலும், அதன் அளவும் மிகுதியாகிவிடுகிறது, மிக அதிகநேரமும் அந்த உணர்ச்சியின் பிடியில் சிக்கிக்கொள்ளவேண்டி நேரிட்டுவிடுகிறது.

இந்த நிலை காரணமாக, வழக்கமாகப் படிப்பதிலே தடங்கல் ஏற்பட்டுவிட்டிருக்கிறது. நேரு மறைவு காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எவ்வெவ்விதமாக வடிவம் கொள்ளும் என்பது பற்றி நண்பர்கள் கேட்கி றார்கள்; விரிவான விளக்கமான பதில்கூற இயலவில்லை; கோடிட்டுக் காட்ட மட்டுமே முடிகிறது.

25—5—64 தொடர்ச்சி.

ரஷியாவில் புரட்சி வெற்றி பெற்று புதுமுறை அமைந்தபோது, அந்தப் புதுமுறையின் முழுப் பொறுப்புகளை உணர்ந்து தமது வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்ளும் நிலை சமூகத்திலே ஏற்பட்டுவிடவில்லை — ஏழை எளியோருக்கு இதம் செய்யும் ஒரு அரசு, பணக்கார ஆதிக்கத்தை அழித்த ஒரு அரசு அமைந்திருக்கிறது என்பதிலே ஒரு மகிழ்ச்சி யும் எழுச்சியும் பிறந்தது என்ற போதிலும், பொது உடைமைத் தத்துவம் பற்றிய தெளிவும், அந்தத் தத்துவத்தைச் செயல்படுத்த பொதுஉடைமை அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் பற்றிய தெளிவும், மக்க ளில் பெரும்பாலாருக்கு — கம்யூனிஸ்டு கட்சியினர் தவிர—ஏற்படவில்லை. அந்தச் சூழ்நிலையைக் காட்டும் சிறு கதைகளின் தொகுப்பு நூல் படித்து வந்ததில், இரண்டு கதைகள் எனக்கு மிகவும் உருக்கம் நிரம்பிய தாகத் தென்பட்டது; ஒன்று ஒரு கிழவியின் கதை, மற்றொன்று ஒரு கைதியின் கதை.

ஒரு கிழவி — வாழ்க்கைச் சுமையைத் தாங்கித் தாங்கி வளைந்துபோன உடல், நைந்துபோன உள்ளம். அவள், தனி, ஒருவரும் உடன் இல்லை. ஏதோ செய் கிறாள், கிடைத்ததை உண்கிறாள்; நடப்பனவற்றைக் காண்கிறாள், ஏதோ நடைபெறுகிறது என்று இருந்து விடுகிறாள். கீழே, விழுவதற்கு முன்புவரை, மரத்திலே ஒட்டிக்கொண்டு, ஆனால் உடன்உள்ள மற்ற இலைகளி னின்றும் முற்றிலும் மாறுபட்ட நிலையில், சருகு இல் லையா—அதுபோல, அந்த மூதாட்டி. அவளுக்கு ஒரே ஒரு கவலை—அவளுடைய வீடு — சொந்தக் குடில்— கலனாகிக் கிடந்தது; எந்த நேரத்தில் இடிந்து விழுந்து விடுமோ என்ற கவலை, அச்சம் மூதாட்டிக்கு. அவளை விட அந்தக் குடில் நலிவுற்றுக் கிடந்தது. தான் கண்ணை மூடுவதற்கு முன்பு வீடு, மண்மேடாகி விடக் கூடாது என்பதுதான் அந்தக் கிழவியின் கவலை. ஆண்டவனையும் அடியார்களையும் அவள் இது குறித் துத்தான் வேண்டிக்கொள்வாள். பொதுஉடைமை அரசு, மக்களின் கஷ்டத்தை மகேசனோ அருளாளர் களோ போக்கமாட்டார்கள், என்ற சித்தாந்தம் கொண் டது. மகேசனைக் காட்டி மதியிலிகளைச் செல்வர்கள் மயக்கி, மிரட்டி, சுரண்டிக் கொழுக்கிறார்கள் என்பது அந்த அரசு அமைத்த கம்யூனிஸ்டு கட்சியின் சித்தாந்தம்.

காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ.	10—00
ஆறுமாத சந்தா	ரூ.	5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

மூதாட்டிக்கு இதுபற்றி ஏதும்தெரியாது; தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமும்எழவில்லை. எப்போதும் போல அவளுடைய வாழ்க்கை நகர்ந்துகொண்டிருந் தது. பழைய கொடுங்கோலாட்சி வீழ்ந்துவிட்டது, புதிய ஆட்சி எழுந்துவிட்டிருக்கிறது என்பது பற்றி அவள் காதில் விழுந்தது, கருத்து அது குறித்துச் செல்ல வில்லை. அவளுக்கு இருந்த கவலையெல்லாம், தன் வீடு இடிந்து விழுந்துவிடக்கூடாது, தன் உயிர் உள்ளவரை —அது கொஞ்ச காலம்தானே—என்பதுதான்.

வீட்டில் பூஜா மாடத்தில், ஏசு, கன்னிமேரி, அடி யார்கள் படங்கள் இருந்தன; நாள்தோறும் வேளை தவறாமல், 'பிரார்த்தனை' செய்துவந்தாள், "பரம பிதாவே! அன்னை மேரியே! அருளாளர்களே! என் வீடு இடிந்து விழுந்து விடாதபடி பாதுகாத்துக் கொடுங்கள். நான் இருக்கப்போவது சில நாட்கள். இதற்குள் வீடு விழுந்துவிட்டால், பழுது பார்க்கப் பணத்துக்கு எங்கே போவேன்; வீடு மண்மேடாகி விட்டால், தங்க இடமு மின்றித் தத்தளிப்பேன்; எனக்குத் துணை எவரும் இல்லை, தேவனே! என் வீடு விழாமலிருப்பது உன் அருளால்தான்; உன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, உழன்று வருகிறேன். அருள் புரிவாய், ஆண்டவனே!" என்றெல்லாம் வேண்டிக்கொண்டாள். இவ்விதமான ஏழையின் புலம்பல், பரமண்டலத்திலே புகாது, சீமான் கொட்டும் காணிக்கைப் பொருளின் சத்தம் மட்டுமே தேவன் செவியில் கேட்கும்; ஏனெனில் தேவன் செவி என்று பாமரர் நம்புகிறார்களே தவிர, உண்மையில் கேட்கும் செவி இருப்பது, பூஜாரிக்குத்தான், கடவுளின் பெயர் கூறிக் கொழுத்துக் கிடக்கும் தரகனுக்குத்தான் என்று புது அரசு அமைத்த கட்சியினர் பேசினர், பேசிவருகின்றனர்; கிழவிக்குத் தெரியாது; தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நினைப்பும் எழவில்லை. தலை முறை தலைமுறையாக நடந்துவரும் தொழுகையிலே தான் அவளுக்கு நம்பிக்கை. நம்பிக்கைக்குரிய வேறு ஒன்று இருக்கமுடியும் என்றுகூட அந்த மூதாட்டி எண்ணிப் பார்த்ததில்லை.

ஒரு இரவு—மழை—கிழவிக்குக் கிலி—வீடு இடிந்து விடுமோ என்று—மழையைத் தாங்கும் வலிவுள்ளதா அந்த வீடு—படுகிழமாயிற்றே! தேவனையும் அடியார் களையும் வேண்டிக் கொண்டபடி இருந்தாள்; யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது; பதறினாள்; தள் ளாடிக்கொண்டே சென்று கதவைத் திறந்தாள்; ஒரு வாலிபன் உள்ளே நுழைந்தான்; குளிர் நடுக்கத்துடன்.

பரிவுடன் அவனுக்கு ரொட்டி கொடுத்தாள் கிழவி. வீட்டுக்குள்ளே வந்ததால் அவனுக்கு நடுக்கம் குறைந் தது. கிழவிக்கு நன்றி கூறினான்.

பூஜாமாடம் தெரிந்தது, வாலிபன் முகத்திலே ஒரு ஏளனப் புன்னகை பிறந்தது; அந்தப் புன்னகையின் பொருளை உணரத்தக்க முறையில் அவனைக் கூர்ந்து பார்க்கக் கிழவியால் இயலவில்லை; கண்கள் ஒளியை இழந்துவிட்டிருந்தன, பெரும்பகுதி.

"இவைகளெல்லாம் என்ன?" — அவன் கேட் கிறான்.

"தேவன் திருஉருவம்—பக்கத்தில் அடியார்கள்— அவர்கள் பெயர்களெல்லாம் எனக்கு முறையாகத் தெரியாது — அடியார்கள் என்று மட்டும் தெரியும் — இவர்கள் அருளாளர்கள் என்பதை அவர்கள் முகத் தின் பொலிவே காட்டுகிறது" — கிழவி கூறுகிறாள். வாலிபன் சிரித்தான், சத்தமிட்டு. "இவர்கள் உனக்கு என்ன தருகிறார்கள்? இவர்களை நீ வணங்கிப் பெறு வது என்ன?"—அவன் கேட்கிறான்.

கிழவிக்கு நடுக்கம், இப்படி ஒரு கேள்வி கேட் கிறானே என்று.

"அப்பா! நானோ கிழவி! என் வீடு இது; பார் எவ் வளவு கலனாகிக் கிடக்கிறது; இது இடிந்து விழாமல் பாதுகாத்தருளவேண்டும் என்றுதான் பிராத்தனை செலுத்துகிறேன்" என்றாள்.

"பிரார்த்தனைகள் - ஜெபதபங்கள்-காணிக்கைகள் சடங்குகள்-இவைகளால் பிரச்சினைகள் தீராது. கிழவி! மக்களின் பிரச்சினைகளை மகேசன் தீர்க்கமாட்டார்; மக்களேதான் தமது உழைப்பால் தீர்த்துக்கொள்ள வேண்டும். பூஜையாம், அருளாம், வெறும் மனப் பிராந்தி"—என்று பேசலானான் வாலிபன்.

மழை நின்றது, அவன் வெளியே சென்றான்; அவன் சொன்ன வார்த்தைகள் அவள் மனதிலே புகவுமில்லை; ஏற்கனவே அவள் மனதில் இருந்துவந்த நம்பிக்கையும் அவளை விட்டு வெளியேறவில்லை. எப்போ தும்போல, "ஏசுவே! மேரியே! அடியார்களே!" என்று தொழுகை நடத்தியபடி இருந்துவந்தாள் மூதாட்டி.

ஒருநாள் பாதிரியார் வந்தார்—பூஜை நடத்திக் கொடுக்க—கிழவி பயபக்தியுடன் தொழுகை நடத்தி னாள். காணிக்கை கேட்டார்; பணம் வைத்திருந்தாள், தேடித் தேடிப் பார்க்கிறாள் சிக்கவில்லை; எக்கு வைத் தோம் என்ற நினைவு வரவில்லை; கிழவிதானே.

"நீ தேடிக்கொண்டே பொழுதை ஓட்டுவாய், நான் காத்துக்கொண்டே கிடப்பதா. எனக்கென்ன வேறு வேலைகளே இல்லையா. இன்னும் பல இடங்கள் போக வேண்டும், பூஜை நடத்திவைக்க. எனக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்கள் பலர்—அவர்களின் சாபத்தைப் பெறுவாய்—எடு, எடு—பணம் இல்லாவிட்டால், பத்து கோழி முட்டைகளாவது கொடு" என்று பக்திப் பிரபா வத்தின் பாதுகாவலன் கேட்கிறான். கிழவி முட்டை களைத் தருகிறாள், பாதிரியார் பெற்றுக்கொண்டு போகிறார்.

அண்ணன்,

அண்ணாதுரை

காவியத் தலைவி

சோர்வோடு படுத்தேன். தூக்கம் கண்களைச் சுழற்றியது. உடலை வருத்தியது.

'களுக்'கென்ற சிரிப்பொலி. அதைத் தொடர்ந்து வளையொலி; கொஞ்சல்; மிஞ்சல். பெண் குரலுடன் இணைந்து ஆண்குரலும் கலந்த கலகலவென்ற நகையொலி என் செவிகளிலே பாய்ந்து உறக்கத்தைக் கலைத்தது.

இவைபோன்ற அனுபவங்கள் எனக்குச் சர்வசாதாரணம். அலுவலகப் பணியாக அடிக்கடி ஊர் சுற்றித்திரியும் எனக்குப் பெரும்பாலான விடுதிகளின் விவரம் தெரிந்ததுதான். ஆனாலும் வேறு போக்கிடம் இல்லாத காரணத்தால் வெளியூர் செல்லும்போதெல்லாம் விடுதிகளில் தங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எழுந்து தூக்க மாத்திரையை விழுங்கிவிட்டுப் புரண்டு படுத்தேன். துயிலலைகள் வந்து என்னைத் தழுவி எங்கோ எடுத்துச் சென்றன.

"சார்! சார்!!"

யாரோ கதவை இடிக்கும் சத்தம் கேட்டது. தூக்கம் கலைந்த நான் படுத்தவாறே அருகே மேசை மீதிருந்த என் கைக்கடிகாரத்தை எடுத்துப்பார்த்தேன். மணி எட்டரை சோம்பலை முறித்துக்கொண்டு எழுந்து சென்று கதவைத் திறந்தேன். அங்கே விடுதிப் பையன் நின்றுகொண்டிருந்தான். "என்ன சார்? ஏழுமணிக்கே சுடுதண்ணி தயாராயிடுச்சே. உங்களை எவ்வளவு நாழி எழுப்பறது?"

"சரி, சரி வர்றேன் போ..."

பற்பசையை எடுத்துக்கொண்டு அறையைப் பூட்டிவிட்டு குளியலறையை நோக்கிப் புறப்பட எண்ணினேன். பூட்டிவிட்டுப் புறப்படத் திரும்பிய நான், அவளைக்கண்டேன்.

அவள்! யார் அவள்? முல்லைமலர் போன்று வெண்மையான அவளது பற்கள் — பவழத்தைப்போல சிவந்த உதடுகள், அத்துடன் காண்போரைக் கவரும் காந்தக் கண்கள், மலரன்ன மலர்ந்த மதி முகம் — என் கண்முன்னே சுழன்றன.

பார்த்தமுகம்! ஆம் நான் பார்த்த முகம்தான் அது? யார் அவள்? நான் எங்கு பார்த்தேன்? அவள் எவ்வளவு நேரமாக என்னையே பார்த்துக்கொண்டு இருந்தாளோ?

இரா. எழிலடியான்

அவளைக் கண்டதும் என் சிந்தனை அவள் யார் என்பதை ஆராய்வதிலேதான் ஈடுபட்டுவிட்டது. அவளோ?

ஆளையே விழுங்கிவிடும் வகையில் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள், வட்டமான முகம். வாட்டமான உடலமைப்பு. குறுகுறுப்பு நிறைந்த விழிகளிலே ஒரு வித பளபளப்பு. இனிமை கலந்தஒரு இதமான புன்சிரிப்பு அவளது உதடுகளில்.

எனக்கோ ஒரே திகைப்பு! பதிலுக்கு நானும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துவிட்டுக் குளியலறையை நோக்கி நடந்தேன். என்னால் அமைதியாக நீராட முடியவில்லை. அது எப்படி இயலும்? உள்ளம் தான் ஒரே கனமாக இருக்கிறதே!

எனக்கிருந்த குழப்பத்தில் வென்னீரிலே தண்ணீரைக் கொட்டி அதையும் தண்ணீராக்கிக் குளித்துவிட்டு வந்தேன். திரும்பி அறைக்குள் நுழையும்போது அவள் அறைப் பக்கம் என் கண்கள் நோக்கின.

மேசையோடு இணைந்திருந்த கண்ணாடி முன்பு அமர்ந்துகொண்டு ஒருசடை மார்புமுன் விழ, மற்றொன்று முதுகுப்பக்கம் தாழ, உதடுகளைக் குவித்து அவள் 'பாலிஷ்' ஏற்றிக்கொண்டிருந்தாள். அதாவது, உதட்டுச் சாயம் தடவிக் கொண்டிருந்தாள். என் கால் ஒலி கேட்டிருக்கும்போலும்! ஒயிலாகத் திரும்பி, மிக நாகரிகமாக ஒரு புன்முறுவல் பூத்தாள்.

யார் அவள் என்ற கேள்விக்கு என் உள்ளத்திலிருந்து இதுவரை விடை கிடைக்கவில்லை. என்னுடன் கல்லூரியில் படித்தவா? இல்லை! பிறகு? இப்பொழுதுதான் நினைவு வருகிறது, அவள் மயிலனின் காதலி! சந்தேகமில்லை! எனது நண்பன்-எழுத்தாளன் மயிலனின் காதலி! அவன்! அறையிலே நான் பார்த்த உருவப் பிரதிக்கு உரிமையானவள் அவள்!

"சார், ரயில்வே அட்டவணை இருக்கா" என்ற பெண்குரல் என்னைச் சிந்தனை வலையினின்றும் மீட்டுத் திரும்பவும் விடுதி அறைக்கே கொண்டு சேர்த்தது. குரலுக்குடையாள் மயிலனின் மனம் கவர்ந்திருந்தவள்தான்! அப்போதுதான் நான் தலைசீவிமுடித்திருந்தேன். அவளோ வெகு உரிமையுடன் என் அறை உள்ளே நுழைந்ததுமன்றி மேசை மீதிருந்த கண்ணாடியில் தன்னழகைப்பார்த்தவாறு பவுடரை எடுத்துத் தன் முகத்துக்குப் பூசிக் கொள்ள ஆரம்பித்துவிட்டாள், நாற்காலியில் அமர்ந்தவாறு.

நானே வியப்புடன் அவளைக் கவனித்தேன். அவளோ என் பக்கம் திரும்பி, "மன்னித்துக்கொள்ளுங்கள். உங்கள் அவசரத்தில் நான் வேறு புகுந்து தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிட்டேன்" என்றாள்.

"அதனால் என்ன? பரவாயில்லை" என்றேன் முகத்தில் ஆண்களுக்கே யுண்டான அசடு மிளிர.

"நீங்கள் எந்த ஊர் சார்? மெட்ராசா? இன்னும் எத்தனை நாள் இங்கிருப்பீர்கள்?"

"நான் அவளை உற்றுப்பார்த்தேன். என் கண்களின் கூர்மை ஒரு விநாடி அவளைத் திகைக்கச் செய்திருக்க வேண்டும். ஆனால் அவளோ அதைச் சட்டை செய்யாது, "ஏன் சார் என்னை அப்படிப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"இல்லை. உன்னை எங்கேயோ பார்த்ததுபோலத் தெரிகிறது. எங்கே என்பதுதான் நினைவில்லை." நான் இழுத்தேன். அவளை நான் பார்த்ததாகச் சொன்னது அவளது சிந்தனைக் குப்பைகளைக் கிளறிவிட்டிருக்கவேண்டும். "நீங்கள் அடிக்கடி ஓட்டல்களில் தங்குவீர்களா?" என்று கேட்டாள்.

"ஓ! நீ நிரந்தர ஓட்டல் பறவையா? என்றேன் கேலியோடு.

ஒருவிநாடி அவள் முகத்தில் வாட்டம் நிழலாட்டம் காட்டியது. மறு விநாடியே சமாளித்துக் கொண்டு மகிழ்ச்சியை முகத்தில் மலரவிட்டு "ஆமாம்!......ஓட்டல் களிலே எந்தன் குடியிருப்பு......" என்று இராகம்போட்டுப் பாடத் துவங்கினாள். அவளது நகைச் சுவையுணர்ச்சி என்னை வியப்பிலாழ்த்தியது. பேசிக்கொண்டே பெட்டியைத் திறந்து அணிந்து கொள்வதற்கான ஆடைகளை வெளியே எடுத்தேன். அத்துடன் உள்ளே இருந்த எனது புகைப்பட 'ஆல்பத்தை' வெளியே எடுத்தேன். நானும் மயிலனும் சேர்ந்து எடுத்துக்கொண்டிருந்த புகைப் படத்தைத் திடீரென்று அவளெதிரில் நீட்டினேன்.

வானத்தில் மூளும் மூட்டத்தைப் போல அவளது முகத்தில் மாற்றம் கண்டேன். அவள் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முயல்வதை, அவள் பல்லைக்கடித்து சிரிக்க முயன்ற நிலையிலேயே புரிந்துகொண்டேன். சில விநாடி அமைதிக்குப்பின், 'தெரியும்' என்றாள்.

"இந்தக் கிறுக்குப்பயல் மயிலனின் வெள்ளை உள்ளத்தைக் காதலெனும் பெருந்தீயாய் பொசுக்கி கரிபடரச் செய்தவள் நீதானா?"

"அவர் என்னைக் காதலித்தது உண்மைதான். அறியாப் பருவத்தின் வளர்ச்சி என்னை அறியும் பருவத்தின் தலைவாயிலில் செலுத்திக்கொண்டிருந்த சமயம் அது. துடிப்பும், துள்ளும் உள்ளமும், கற்பனையும், கனவுகளும் ஒன்றுடன் ஒன்று மோதிக் களியாட்டமாடிக் கொண்டிருந்த காலம் அது. அப்பொழுதுதான் உங்கள் நண்பர் மயிலன் என் வாழ்வில் புகுந்தார். காவியத்தின் தலைவன்போன்று என் எண்ணத்திற்கேற்ப உருவம் கொண்டிருந்தார். ஆனால்.." அவள் தனது பேச்சை நிறுத்திவிட்டு ஒரு விநாடி எங்கோ நோக்கிப் பெருமூச்செறிந்தாள்.

"ஆனால், என்ன?" என்று கேட்டேன் நான்.

"வாழ்க்கையைப்பற்றி நான் கொண்டிருந்த எண்ணம் வேறு. அவர் நினைத்துக்கொண்டிருந்தது வேறு."

"அப்படியானால்?"

"அப்படியானால் என்ன? ஒரு முறை, அது அவருடைய பி. ஏ., இறுதி வகுப்பாக இருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன். தேர்வு எழுதிவிட்டு ஊருக்கு வந்த அவர் என்னைப் பார்க்க ஓடோடியும் வந்தார். 'எனக்காக என்ன கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்டேன்.

"உனக்காக என்னால் என்ன கொண்டுவர முடியும், மாருத அன்பைத் தவிர?' என்று கேட்டார்.

"அன்பாம் அன்பு? அதுவும் மாருததாம்! யாருக்கு வேண்டும் அவருடைய மாருத அன்பு? வெறுங்கை முழம் போடுமா? அறிவும் படிப்பும் யாருக்கு வேண்டும்? வாழ்க்கைதானே முக்கியம்? மெத்தை நித்திரையும் மென்காற்றைப்போலச் சுகமூட்டும் கார் சவாரியும் எனக்கு வேண்டும். பட்டைத் துறந்து பவுடரை மறந்து வாழ நான் சந்நியாசினி அல்லவே! ஆகவேதான் அவருக்குச் சொன்னேன். 'மாருத அன்பு நீங்கள் மட்டுமா காட்டுகிறீர்கள்? அழகான பெண் என்றால் ஆடவர்கள் அத்தனை பேரும் அந்த ஒரே பல்லவியைத் தானே பாடுகிறார்கள்?' என்று. இதில் என்ன தவறு?"

அவள் என்னை நோக்கிக் கேட்டாள். சர்வ சாதாரணமான கேள்வியாயினும்கூட என்னால் பதில் சொல்ல இயலவில்லை. தவறு; தவறில்லை என்ற இரண்டில் ஒன்றுதான் மறுமொழியாக வேண்டும். அதைத் தெரிவிப்பதால் என்ன நிகழ்ந்துவிடப் போகிறது? ஆகவே நான் மௌனமானேன்.

"வளமான வாழ்க்கை வேண்டும் என்ற ஆசை எனக்குச் சிறுவயதிலேயே உண்டு. நான் பிறந்த இடமோ இல்லாத இடம். ஆகவே இருப்பவர்களைப் பார்த்து ஏங்கிப் பெருமூச்செறியும் பழக்கம் இளம் பருவம்முதற்கொண்டே என்னுடன் வளர்ந்தது. எப்படியும் அந்த மேலிடத்து வாழ்க்கைக்குத் தாவி விட என் மனம் துடித்தது. உங்கள் நண்பர் மயிலன், என் எண்ணம் ஈடேற உதவுவார் என்று எண்ணினேன். அவரோ, கிடைத்ததைக் கொண்டு நிம்மதியடையும் மனிதராக, என் இலட்சியத்திற்கு மாறுபட்ட மனிதராக இருந்தார். எனக்கு நான் கொண்டிருந்த ஆசைகளின் நிறைவேற்றம்தான் பெரிது. ஆகவேதான், என்னைத் திரையுலகில் அறிமுகப்படுத்துவதாகச் சொன்ன ஒருவரின் பேச்சை நம்பி, வீட்டை விட்டு வந்துவிட்டேன்."

"உன் திரை நுழைவு என்ன ஆயிற்று?"

"என்னை அழைத்துப் போனவர் அப்படியொன்றும் பெரிய மனிதரல்ல. ஆனாலும்கூட மயிலனைப் போல கூச்ச சுபாவமுள்ளவரும் அல்ல. என்னைப் பல இடங்களுக்கு அழைத்துப்போனார். ஒரு சில படங்களில் கும்பலில் ஒருத்தியாகவோ சாமரம் வீசும் தோழியாகவோ, குழு நடனத்தில் ஒருத்தியாகவோ தலை காட்ட முடிந்தது.

"பிறகு ஏன் இந்தத் தொழிலில் இறங்கிவிட்டாய்?"

"என்ன செய்வது? வயிறு இருக்கிறதே! எப்பொழுதும் எனக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அன்றியும் பகட்டான உடைகளும் மிடுக்கான பாவனைகளும் தேவைப்படும் அந்தத் தொழிலுக்கான மூலதனத்தை எப்படியும் சம்பாதித்து ஆகவேண்டும். என்றாவது ஒரு அசட்டுத் தயாரிப்பாளன் என்மேனி அழகில் மயங்கி, என் பிடிக்குள் சிக்கிக்கொண்டால், அன்று முதல் என் நிலை உயர்ந்துவிடும். நான் ஒரு பெரிய நட்சத்திரமாகி விடுவேன்,

அந்த நம்பிக்கை எனக்கு இன்னும் இருக்கிறது'' கர்வத்துடன் அவள் தனது உடலை ஒருமுறை நோக்கிக் கொண்டாள்; நானும்கூட நோக்கினேன். கட்டான உடல்தான்; இளமையின் மதப்பு அவளது உடல் உறுப்புகளின் ஒவ்வொரு கோணத்திலும் திமிர்த்துக் கொண்டிருந்தது.

"உன்னால் மயிலன் உள்ளம் உடைந்து போனதோ, வேலைக்குப் போகாமல் பைத்தியம் பிடித்தவன் போல இருப்பதோ உனக்குத் தெரியுமா?''

"நானும்கூட கேள்விப்பட்டேன். நீங்களே சொல்லுங்கள். அதற்கு நானா பொறுப்பாளி? அவருக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைப் பார்த்து அவர் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழவேண்டும் என்பதுதான் என் ஆசை. அவருக்கு நான் ஏற்றவளல்ல. எங்கிருந்தாலும் அவர் வாழ்க்கை நன்கு அமையவேண்டும் என்பதுதான் நான் விரும்புவது.''

"சரி. நீ சாப்பிட்டாயிற்று?''

"இல்லை. இனிமேல்தான் சாப்பிட வேண்டும்.'' "இந்தா போய்ச் சாப்பிடு'' ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தேன். அவள் வாங்கிக்கொண்டாள். "நீ போகலாம்'' என்றேன். "மீண்டும் எப்பொழுது வர?''

கேள்வியின் பொருளைப் புரிந்து கொண்டேன். மாலை 4 மணிக்குப் புறப்படும் வண்டியில் செல்வதற்காக முன்கூட்டியே பயணச் சீட்டு பெற்றிருந்தேன். ஆகவே, "இரவு 8 மணி'' என்று சொன்னேன். பொய்தான். இனமாகக் கொடுக்கிறேன் என்று சொன்னால் ஒரு வேளை அவள் மறுப்பளிக்கக்கூடும். அவள் படும் வறுமையை முகம் காட்டிற்று, ஏனோ அப்படிச் செய்தேன்.

✲

நான் தலைநகர் திரும்பியதும் என்னை எதிர்நோக்கி என் மைத்துனர் காத்துக் கொண்டிருப்பதை யறிந்தேன். திருச்சியில் ஓர் அச்சகம் அமைத்து நடத்திக்கொண்டிருந்த, அவர், திடீரென்று அதை மூடிவிட்டுப் பத்திரிகை யொன்று தொடங்கி நடத்த சென்னை வந்திருந்தார். என் மனைவியின் மூலமாக, மயிலனுக்கும் எனக்கும் உள்ள நட்பை அறிந்து, தனது பத்திரிகைக்கு மயிலனை ஆசிரியராக்கத் திட்டம் போட்டிருந்தார். பி. ஏ., தேறியதும் மயிலன் எழுதி, ஒரு வாரப் பத்திரிகையில் தொடர் கதையாக வெளிவந்த "சொர்க்கத்தின் ராணி'' என்ற புதினம் அண்மையில் மிகப் புகழடைந்து வருகிறது. பல்வேறு மொழிகளிலும்கூட மொழி பெயர்க்கப்பட்டு மயிலனுக்கு அழியாத புகழையும் நிறையபொருளையும் வாரிக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஆகவே, மயிலனை ஆசிரியப் பொறுப்பில் அமர்த்துவதால் அது பத்திரிகைக்கு விளம்பரமாகவும், வணிகக் கண்ணோட்டத்தில் தரமான முதலீடாகவும், இலக்கியத் தரம் என்ற கோணத்தில் சிறப்பிடம் பெறவும் இயலுமென்பதைச் சிந்தித்தே மைத்துனர் அம்முடிவிற்கு வந்திருந்தார்.

என் அறைத் தோழனாக அவன் இருந்தபோதுதான் அதை எழுத ஆரம்பித்தான். அப்பொழுது எங்களுக்கு ஆங்கிலத்தில் கவிஞர் மில்டனின் 'இழந்த சொர்க்கம்' பாடமாக வைக்கப்பட்டிருந்தது. அதிலும் ஆதியில் படைக்கப்பட்டதாக விவிலிய நூல் விவரிக்கிற ஆதாமும் ஏவாளும் ஆரம்பத்தில் மகிழ்ந்து வாழுகிற 'ஏடன் தோட்ட'ப் பகுதியைத்தான் நாங்கள் படிக்கவேண்டியிருந்தது. ஏதும் அறியாது, மகிழ்ச்சியில் திளைத்து வாழ்ந்து வரும் ஏவாளைச் சைத்தான் கண்டு, அவளைச் சலனத்திற் காளாக்கி, இறைவன் ஆணையையும் மீறி, உண்ணத் தகாதென்று கூறப்பட்ட கனியை உண்ணச் செய்ய, அதிலிருந்து தான் உலகில் துன்பம் பிறந்ததாகக் கதை. கவிதைச் சுவையுணர்ந்த மயிலனும் நானும் மிகவும் ரசித்து அந்தக் காவியத்தைப் படித்தோம். மயிலன் மில்டனின் கருத்தைப் பாராட்டினான். ஆனாலும், ஏவாளின் வீழ்ச்சி அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனது காதலி ராணியை ஏவாளின் நிலையில் இருத்திப் புதுக் கோணத்தில், இருபதாம் நூற்றாண்டின் சூழலுக் கேற்ப ஒரு புதிப்பை எழுத விரும்பினான். முடிவோ, மிகச் சிறப்பாக, வீழ்ச்சிபெறாத பெண்மை எப்படி சொர்க்கத்தை உண்டாக்கி ஆண்மைக்கு மலர்ச்சியைக் கொடுக்க இயலும் என்பது விளங்கும்படியாகச் "சொர்க்கத்தின் ராணி'' உரை நடைக் காவியத்தை எழுத ஆரம்பித்தான். ஆனால் ராணியின் போக்கு அவன் எழுதத் திட்டமிட்டிருந்த நாவலின் போக்கையே மாற்றிவிட்டது. 'இழந்த சொர்க்கம்' போலவேமுடிவும்அமைந்துவிட்டதானாலும்கூட, மயிலனின் கற்பனை வளமும், நடையழகும் தத்துவ விளக்கமும், தனித் தன்மையும் அவன் நாவலைச் சிறந்த ஓர் கற்பனைக் காவியமாக ஆக்கிவிட்டிருந்தது.

மைத்துனரை அழைத்துக் கொண்டு மயிலனின் வீட்டிற்குச் சென்றேன். மயிலனின் முகத் தோற்றத்திலிருந்து என்னால் எதையும் விளங்கிக்கொள்ளமுடியவில்லை தான். அவனது காதலியின் துரோகம், அவனது இலட்சியக் கோட்டையில் விழுந்த மாபெரும் இடி தான். அவ்வளவையும் தாங்கிக் கொண்டிருந்த அவனது நெஞ்சுரத்தை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

எனது மைத்துனரை மயிலனுக்கு அறிமுகப்படுத்தி, அவர்

நீங்கள் பெற்ற குழந்தைகள் ஒரு குற்றம் செய்துவிட்டால், உடனே அதனைக் கையிலெடுத்து அணைத்துக்கொள்ளுங்கள். உச்சிமோந்து ஒரு முத்தம் கொடுங்கள். உங்கள் இதயத்தோடு அந்தக் குழந்தையின் இதயமும் சேர்ந்து அடிப்பதாக நினைக்கட்டும். நீங்கள் அந்தக் குழந்தையை உண்மையாகவும் உள் ளன்போடும் விரும்புகின்றீர்கள் என்று அஃது உணரட்டும்.

உங்கள் குழந்தை உங்களிடம் பொய் வார்த்தை சொல்லி விட்டால், அதனிடம் கோபப்படாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். "குழந்தாய், நான்கூட உன்னைப்போலவே நூற்றுக் கணக்கான பொய்களைப் பேசியிருக்கின்றேன்; ஆனால் அது நன்மை தரவில்லை. ஆகவே பொய் பேசுவது நல்லதல்ல'' என்று இனிய மொழிகளால் அன்புடன் சொல்லுங்கள்.

—இங்கர்சால்.

வந்த காரியம் பற்றியும் எடுத்துரைத்தேன். மயிலனின் முகத்தில் சோகப் புன்னகை மிளிர்ந்தது. "என்னை மன்னித்து விடு பொன்முடி. உனது மைத்துனர் எனக்கு அளிக்க விரும்பும் இடம் மிக உயர்வானது. ஆனால் ஏனோ, என்னால் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை" என்றான்.

அப்படியானால், என்னதான் செய்வதாக முடிவு பண்ணியிருக்கிறாய்? எந்தப் பொறுப்பிற்கும் ஆட்படுத்திக்கொள்ளாது எழுத்துத் துறையில் பணியாற்ற இருக்கிறாயா?" என்றேன். வறண்ட சிரிப்பு சிரித்துவிட்டு அவன் சொன்னான். "பொன்முடி! நான் எழுதிய முதல் நாவல் தான், "சொர்க்கத்தின் ராணி!" நான் அதை எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்த சக்தி எது என்பதை நீ அறிவாய். எனது முடிவான நாவலும் அதுதான். வேறு எதுவும் எழுதுவதாக எனக்கு எண்ணமில்லை; அதற்கான உள்ளக் கிளர்ச்சியுமில்லை."

"நீங்கள் உங்கள் விருப்பப்படி இருக்கலாம். நினைத்த நேரத்தில் வரப் போக உரிமையும், உங்கள் எண்ணத்திற்கேற்ப எழுதும் வாய்ப்பும், விரும்புகின்ற அளவில் சம்பளமும் நான் கொடுப்பேன்" என்று மைத்துனர் சொன்னார்.

"உனது நாவல் "சொர்க்கத்தின் ராணி," உன் முதல்நாவலாக இருப்பினும் அதற்குக் கிடைத்துள்ள வரவேற்பும் பாராட்டும் நீ அறியாததல்ல. தென்னக மொழிகளிலும், வடக்கே வங்காளத்திலும் அது மொழி பெயர்க்கப்பட்டுள்ளது."

"முதன் முதலில் அது ஓர் இலங்கைத் தமிழரால் சிங்களத்தில் பெயர்க்கப்பட்டது. அண்டை நாட்டில் பாராட்டு பெற்றவுடன்தான் மலையாள மொழியிலும் பிறகு தெலுங்கு, கன்னட மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது" என்றான் மயிலன்.

"அப்படியானால் இதுவரை உங்களுக்குச் செய்தி தெரியாதா? அமெரிக்காவில் உள்ள ஆசிய பண்பாட்டுக் கழகம் என்ற நிறுவனம் உங்களது சொர்க்கத்தின் ராணியை ஆங்கிலத்தில் வெளியிடத் திட்டமிட்டிருக்கிறதே! அமெரிக்க செய்தி இலாகாவில் பணிபுரியும் என் நண்பர் ஒருவர் சொன்னார் என்று தகவல் கொடுத்தார் மைத்துனர். இப்படியாகப் பலப்பல பேசிக்கொண்டிருந்தும் முடிவில் மயிலன் தனது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளவேயில்லை. நாங்கள் ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினோம்.

✽

நான் மயிலனைச் சந்தித்து ஆறு திங்கள்களுக்கு மேலாகிவிட்டன. அவனது "சொர்க்கத்து ராணி" திரைப்படமாகவர இருப்பதாகச் செய்திகள் உலாவின. திரை உலகத்தின் முன்னணிப் பிரமுகரான எனது நண்பர் ஒருவர் வேட்டைத் துப்பாக்கி வாங்க விரும்பினார். அது பற்றிக் காவல் துறையினரிடமிருந்து விவரம் அறிய விரும்பினார். எனது நண்பர்களில் ஒருவர் காவற் துறையில் 'இன்ஸ்பெக்டர்' ஆக பணியாற்றி வந்ததால் நானும் விவரம் அறிந்து வந்து கொடுப்பதாக ஒத்துக்கொண்டேன். நண்பரை நாடி அவர் மனைஏகின சமயம், அவர் இல்லை. குறிப்பிட்ட ஒரு வழக்குமன்றத்தில் சென்று சந்திக்கும்படி அவர் மனைவியார் சொன்னார்.

நான் வழக்குமன்றம் சென்றபொழுது வெளிவாசலில் என் நண்பன் 'சிகரெட்டு' புகைத்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். என்னைக் கண்டவுடன் அவன் முகம் மலர்ந்தது. 'ஏது இவ்வளவு தூரம்?' என்று வினவினான், "ஒன்றுமில்லை, உன்னைத்தான் பார்த்துப்பேச விரும்பினேன். நீ இங்கிருப்பதாக உனது மனைவி சொன்னதன்பேரில் வந்தேன்" என்றேன்.

"ஒரு கால்மணி நேரம் எனக்காகக் காத்திருக்க முடியுமா? என் பணி முடிந்துவிட்டது; புறப்பட வேண்டியதுதான்" என்றான். நான் சம்மதம் தெரிவித்தேன். அவன் அணிந்திருந்த காக்கிச்சட்டையின் பெரிய பையிலிருந்து ஓர் அழகிய கையடக்கமான ஆங்கிலப் புத்தகத்தை எடுத்து நீட்டினான். நான் திகைத்தேன். அது, மயிலனின் உரைநடைக் காவியமான 'சொர்க்கத்தின் ராணி' அமெரிக்க ஆங்கிலப் பதிப்பு!

"நம்முடன் படிக்கவில்லையா மயிலன்? அவன் எழுதிய கதையப்பா இது. மிகச் சிறந்ததாக இருப்பதால் பாராட்டி ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கிறார்கள்" என்றான். 'அத்துடன் இல்லை; இந்திய அரசாங்கமும் பாராட்டி, மயிலனின் நாவலைப் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்" என்றான்.

வழக்கு மன்றத்திலிருந்து காவற்துறையினர் சில பெண்களை அழைத்துக்கொண்டு வெளியே வந்தனர். ஒருவர், என் நண்பன் அருகேவந்து வணக்கம் செலுத்தி ஆணையை எதிர்நோக்கி நின்றார். "நீ அழைத்துப்போ. ஒரு நாழியளவில் நான் நிலையத்திற்கு வந்துசேருகிறேன்" என்றான் என் நண்பன்.

காவற்துறையினரின் பேருந்து வண்டியில் முக்காடிட்டுக் குனிந்த தலையுடன் அந்தப் பெண்கள் ஏறிக்கொண்டிருந்தனர். என் நண்பன் சிரித்தவாறு, "என் பணிதான் அப்பனே! நேற்று இரவு விடுதிகளிற் சோதனைபோட்டேன். அவ்வளவு பேரும் சொர்க்கத்து ராணிகள்!" என்று சொல்லிச் சிரித்தான். வண்டியில் ஏறிக்கொண்டிருந்த பெண்களைக் கவனித்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் இளம் பருவப் பெண்கள்தான். கடைசியாக ஏறியவளைக் கண்டவுடன் என் நெஞ்சம் என்னையறியாமலேயே வலித்தது. பரிதாபத்துக்கு உரிய பாவையாய், மயிலனின் அன்பிற்கு ஒரு காலத்தில் உரித்தாயிருந்த ராணியும் ஏறிக்கொண்டிருந்தாள்.

என்நண்பனுக்குத்தெரியாது, அவனால் கைதுசெய்து தண்டிக்கப்பட்டுள்ள ராணிதான் அவன் பாராட்டிய காவியத்தின் தலைவி என்று!

பேசாமல் நண்பனுடன் நடந்தேன் நான்.

★

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.